# ஊரக வளர்ச்சி மற்றும்
# ஊராட்சித் துறை

## வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும்
## ஊரகக் கடன்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2026 - 2027

## மானியக் கோரிக்கை எண். 42

## திரு. ச. ஜோசப் விஜய்
முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2026

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| **1.** | **முன்னுரை** | 1 |
| 1.1 | சிறு சேமிப்பில் துவங்கி மகளிர் வாழ்வாதார மேம்பாட்டிற்கான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பரிணாமவளர்ச்சி | 3 |
| 1.2 | தொலைநோக்குப் பார்வை | 10 |
| 1.3 | மகளிர் அதிகாரமளிப்பிற்கான கொள்கைச் சூழல் மற்றும் அவசியம் | 13 |
| 1.4 | 2026–27 ஆம் ஆண்டிற்கான முன்னெடுப்பு முயற்சி | 25 |
| 1.5 | வெற்றித் தமிழகம் தொலைநோக்குப் பார்வையை நோக்கி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தை புதிய கண்ணோட்டத்துடன் மறுசீரமைத்தல் | 29 |
| **2.** | **தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)** | 35 |
| 2.1 | பின்னணி | 37 |
| 2.2 | 2026–27 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் உத்திகள் மற்றும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள். | 42 |
| 2.3. | திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் | 45 |
| 2.4. | 2026–27 ஆம் ஆண்டிற்கான முக்கிய இலக்குகள் | 101 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| **3** | **தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)** | 103 |
| 3.1 | பின்னணி | 105 |
| 3.2 | 2026-27 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் உத்திகள் மற்றும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள். | 110 |
| 3.3 | திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் | 112 |
| 3.4 | வாழ்வாதார உருவாக்கம் மற்றும் தொழில் குழுமங்களை முறைப்படுத்துதல் | 122 |
| 3.5 | திட்டங்களை ஒருங்கிணைப்பதில் சமுதாய அமைப்புகளின் பங்களிப்பு | 124 |
| 3.6 | 2026-27 ஆம் ஆண்டுக்கான முக்கிய இலக்குகள் | 127 |
| **4** | **தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP)** | 129 |
| 4.1 | பின்னணி | 131 |
| 4.2 | தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் – (TNRTP 2.0) | 133 |
| 4.3 | 2026-27 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் உத்திகள் மற்றும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள். | 135 |
| 4.4 | திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் | 138 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| **5** | **தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்க மையம் (TN-RISE)** | 153 |
| 5.1 | பின்னணி | 155 |
| 5.2 | 2026-27 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் உத்திகள் மற்றும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள். | 159 |
| 5.3 | திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் | 161 |
| 5.4 | 2026-27 ஆம் ஆண்டிற்கான முக்கிய இலக்குகள் | 166 |
| **6** | **தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU-GKY)** | 167 |
| 6.1 | பின்னணி | 169 |
| 6.2 | 2026-27 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் உத்திகள் மற்றும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள். | 173 |
| 6.3 | திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் | 174 |
| 6.4 | 2026-27 ஆம் ஆண்டிற்கான முக்கிய இலக்குகள் | 178 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| **7.** | **தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் (TNWeSafe)** | 179 |
| 7.1 | பின்னணி | 181 |
| 7.2 | திட்டம் – ஓர் பார்வை | 182 |
| 7.3 | 2025–26 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயல்பாடுகள் | 187 |
| 7.4 | செயல்திட்டம் (2026–2027) | 196 |
| **8.** | **தொலைநோக்கு நடவடிக்கைகள்** | 205 |
| 8.1 | 2031 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த தொலைநோக்கு (Vision 2031) கட்டமைப்பு | 207 |
| 8.2 | ஓராண்டு செயல் திட்டம் (2026–2027) : ஒருங்கிணைப்பு மற்றும் மின்னணு உட்கட்டமைப்பு | 208 |
| 8.3 | மூன்றாண்டு செயல் திட்டம் (2026–2029): தொழில்துறை விரிவாக்கம் மற்றும் மதிப்புக்கூட்டல் | 210 |
| 8.4 | ஐந்தாண்டு செயல் திட்டம் (2026–2031): முழுமையான வறுமை ஒழிப்பு மற்றும் தொழில் முனைவோர் நிறுவனம் | 212 |
| 8.5 | விரிவான முதன்மை செயல்பாட்டு முடிவுகளுக்கான கண்காணிப்பு பலகை மற்றும் முக்கிய செயல்திறன் குறியீட்டு அட்டவணை | 213 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 9 | **நிதி ஒதுக்கீடு** | 215 |
| 9.1 | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் 2026-27 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நிதித் திட்டம் | 217 |
| 10 | **முடிவுரை** | 219 |

# 1. முன்னுரை

### 1.1. சிறு சேமிப்பில் துவங்கி மகளிர் வாழ்வாதார மேம்பாட்டிற்கான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பரிணாமவளர்ச்சி

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், இந்தியாவின் வளர்ச்சி பாதையில் பெண்களின் சமூக, பொருளாதாரம் மற்றும் அரசியல் அதிகாரமளிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு முக்கிய நிறுவனமாக திகழ்கிறது. நிறுவன சட்டம் 1956ன் கீழ் பதிவு செய்யப்பட்டு டிசம்பர் 9, 1983 அன்று மாநில அரசின் நிறுவனமாக துவங்கப்பட்டது. கல்வி, திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் பொருளாதார தன்னிறைவு அடைவதன் மூலம் தங்களது வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் பெண்கள் தங்களுடைய சுயசார்பு தன்மையை அடைவதே இதன் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

1983 ஆம் ஆண்டு முதல் 2006 வரை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சமூக நலத்துறை கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்தது. இந்நிறுவனம் துவங்கிய காலத்தில், வறுமை ஒழிப்பிற்காக செயல்படுத்தப்பட்ட வழக்கமான நலத்திட்ட உதவி அணுகுமுறைகள், பெண்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள், வறுமை ஒழிப்பு, பொருளாதார பாதிப்பு மற்றும் சமூக புறக்கணிப்பு போன்ற சவால்களை முறியடிக்க போதுமானதாக இல்லை என்பது கண்டறியப்பட்டது. எனவே, 1989 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன் முன்னோடி திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. பொருளாதார ரீதியாக பின்தங்கிய பெண்களை ஒருங்கிணைத்து, அவர்களின் சேமிப்பு மற்றும் கடன் நடவடிக்கைகளை ஜனநாயக முறையில்

நிர்வகிக்கும் சுய உதவிக் குழுக்களை உருவாக்குவதன் மூலம் சமூக மூலதனத்தை வலுப்படுத்துவதுடன், முறைசாரா நிதி நிறுவனங்களின் சார்புநிலையிலிருந்து பெண்களை விடுவித்து, அவர்களின் பொருளாதாரத் தன்னிறைவு மற்றும் சமூக அதிகாரமளிப்பை உறுதிப்படுத்தி, தங்களது சமூக–பொருளாதார முன்னேற்றத்தைத் தாங்களே வழிநடத்தும் திறனை மேம்படுத்துவதில் இம்முன்னோடி திட்டம் முக்கியப் பங்காற்றியுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்ட முன்னோடி திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, பன்னாட்டு வேளாண் மேம்பாட்டு நிதியத்துடன் (International Fund for Agricultural Development – IFAD) இணைந்து, மகளிரின் பொருளாதார மேம்பாடு மற்றும் அதிகாரமளிப்பை நோக்கமாகக் கொண்ட இலக்கு சார்ந்த கடன் மற்றும் மேம்பாட்டுத்

திட்டத்தை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தியது. IFAD திட்டத்தை செயல்படுத்திய அனுபவங்கள் மற்றும் கற்றல்களின் அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாடு அரசு 1997 ஆம் ஆண்டு மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும் தனது முதன்மைத் திட்டமான மகளிர் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் (TNCDW) நிறுவன ரீதியான மேற்பார்வையில், அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் (NGOs) மூலம் அடித்தள மக்களை ஒருங்கிணைத்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் வாயிலான முறைசார்ந்த கடன் வசதி ஏற்படுத்துதல் ஆகிய மூன்று முக்கிய கூறுகளை உள்ளடக்கிய மும்முனை செயல்பாட்டு கட்டமைப்பை உருவாக்கியது.

ஜூலை 2006–ல் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு சமூக நலன் துறையிலிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு மாற்றப்பட்டதால் அமைப்பு முறையில் முக்கிய மாற்றம் நிகழ்ந்தது. இந்த நிர்வாக மாற்றம் பெண்களின் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளுடன் நிறுவனங்கள் இடையே செயல்திறன் மிக்க ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியது. இதன் மூலம் சுய உதவிக் குழு கூட்டமைப்புகள் கிராம ஊராட்சிகளுடன் ஒருங்கிணைக்க வழிவகுத்ததுடன், பெண்களின் சேமிப்பு மற்றும் சிறுகடன் நடவடிக்கைகளைத் தாண்டி கிராமப்புற ஊராட்சி நிர்வாகம், பொது சேவை வழங்கல் மற்றும் பங்கேற்புடன் கூடிய திட்டமிடலில் தலைமைப் பொறுப்பேற்கும் நிலைக்கு விரிவடைந்தது.

கடந்த இருபதாண்டுகளாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கீழ்க்கண்ட ஐந்து தனித்துவம் வாய்ந்த திட்டங்கள் மற்றும் இயக்கங்களை செயல்படுத்தி வருகிறது.

- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM),
- தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM),
- தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP),
- தமிழ்நாடு ஊரக பாதுகாப்பு மற்றும் தொடக்க நிறுவன மேம்பாட்டு திட்டம் (TN–RISE),
- தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டம் (DDU–GKY)

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சுய உதவிக் குழுக்கள், தொகுப்புகள் மற்றும் தொழில்

நிறுவனங்கள் தயாரிக்கும் அனைத்து பொருட்களுக்கும் மாநில அளவிலான ஒருங்கிணைந்த வர்த்தக அங்கமாக மதி (MATHI) என்ற வணிக முத்திரையை நிறுவியுள்ளது. இத்தகைய மாற்றங்களின் தொடர்ச்சியாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் (TNCDW) செயல்பாடுகள் படிப்படியாக மகளிர் தலைமையிலான தொழில்முனைவோர் மேம்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளன.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 37 மாவட்டங்களில் 40.61 இலட்சம் உறுப்பினர்களுடன் 3.51 இலட்சம் சுய உதவிக் குழுக்களை, 12,524 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் 388 மாவட்ட அளவிலான கூட்டமைப்புகளுடன் ஒருங்கிணைத்துள்ளது. நகர்ப்புர வாழ்வாதார

இயக்கம் 1.72 இலட்சம் சுய உதவிக் குழுக்களை நகர்ப்புரங்களில் கூடுதலாக உருவாக்கியுள்ளது.

முறைசாரா நிதி நிறுவனங்களிலிருந்து நலிவுற்ற குடும்பங்களைப் பாதுகாப்பது மற்றும் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதை நோக்கமாக கொண்டு தொடங்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள், தினமும் சுமார் 15 இலட்சம் குழந்தைகளுக்கு உணவளிக்கும் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் முதுகெலும்பாக திகழ்கிறது.

## 1.2. தொலைநோக்குப் பார்வை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாட்டு உத்திகள், தமிழ்நாடு அரசின் விரிவான சமூக–பொருளாதார வளர்ச்சி இலக்குகளுடன் இணைந்து மகளிர் தலைமையிலான வளர்ச்சியை முன்னெடுப்பதை முதன்மையாகக் கொண்டுள்ளது.

**நோக்கம்**: ஒவ்வொரு மகளிர் சுய உதவிக் குழுவும் நிதி உள்ளாக்கத்தைப் பெற்று தொழில்முனைவு மேற்கொள்ளத் தயார்நிலையை அடையும் வகையிலும், ஒவ்வொரு கிராம ஊராட்சியும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு உகந்ததாக உருவாக்கப்படும் வகையிலும், நலிவுற்ற எந்த ஒரு குடும்பமும் நிறுவன ஆதரவின் வரம்பிற்கு வெளியில் இல்லாதவாறும் மகளிர் தலைமையிலான பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழும்.

**குறிக்கோள்கள்**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:

- ஏழை மற்றும் விளிம்புநிலை மகளிரை ஒருங்கிணைத்து, நிலையான

அமைப்புகளை உருவாக்கி வலுப்படுத்துதல்.

- அனைவருக்கும் நிதி உள்ளாக்கம் மற்றும் எளிதில் அணுகக்கூடிய கடன் வசதிகளை உறுதிசெய்தல்.

- உயர்மதிப்புடைய வாழ்வாதார மேம்பாடு, திறன் மேம்பாடு மற்றும் புதிய தொழில்முனைவோரை உருவாக்க உதவுதல்.

- ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைந்த செயல்பாடுகளை வலுப்படுத்துதல்.

## 1.3. மகளிர் அதிகாரமளிப்பிற்கான கொள்கைச் சூழல் மற்றும் அவசியம்

### 1.3.1. உலகளாவிய நீடித்த–நிலைத்த வளர்ச்சி இலக்குகள் (SDG)

சர்வதேச அளவில், பாலின சமத்துவத்தை அடைவது என்பது பல்வேறு நீடித்த–நிலைத்த வளர்ச்சி இலக்குகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது என்பதை ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த–நிலைத்த வளர்ச்சிக் கொள்கை 2030 வலியுறுத்துகிறது. ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட நான்கு நீடித்த–நிலைத்த வளர்ச்சி இலக்குகளை நேரடியாகச் செயல்படுத்துவதே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முக்கியப் பணியாகும்.

**SDG – 1: வறுமையின்மை**

- **இலக்கு 1.1 & 1.2:** தீவிர வறுமையை ஒழித்தல் மற்றும் வறுமையின் அனைத்து பரிமாணங்களையும் குறைத்தல்.
- **இலக்கு 1.3:** அனைவருக்கும், குறிப்பாக நலிவுற்ற மகளிருக்கு உகந்த தேசிய அளவிலான சமூகப் பாதுகாப்பு அமைப்புகளை செயல்படுத்துதல்.
- **இலக்கு 1.4 & 1.b:** பொருளாதார வளங்கள், நிதிச் சேவைகள், நுண்கடன், நிலம் மற்றும் சொத்துகளில் சம உரிமையை உறுதி செய்தல்.

**SDG – 2: பசி இல்லாமை**

- **இலக்கு 2.1 & 2.2:** பசியை ஒழித்தல் மற்றும் குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களிடையேயான அனைத்து

வகையான ஊட்டச்சத்து குறைபாடுகளையும் நீக்குதல்.

- **இலக்கு 2.3:** சிறு அளவிலான உணவு உற்பத்தியாளர்களின், குறிப்பாக மகளிரின், வேளாண் உற்பத்தித்திறனையும் வருமானத்தையும் இரட்டிப்பாக்கும் வகையில், வேளாண் இடுபொருட்கள், நிதி உதவிகள் மற்றும் சந்தை வாய்ப்புகளைப் பெறுவதை உறுதி செய்தல்.

**SDG – 5: பாலின சமத்துவம்**

- **இலக்கு 5.1 & 5.2:** அனைத்து வகையான பாலின பாகுபாடுகளையும், பாலின அடிப்படையிலான வன்முறைகளையும் ஒழித்தல்.
- **இலக்கு 5.5:** முடிவெடுக்கும் அனைத்து நிலைகளிலும் மகளிரின் முழுமையான மற்றும் பயனுள்ள பங்கேற்பையும்,

தலைமை ஏற்பதற்கான சமவாய்ப்புகளையும் உறுதி செய்தல்.

- **இலக்கு 5.a:** பொருளாதார வளங்கள், சொத்துரிமை, நிதி மற்றும் வாரிசுரிமைகளில் மகளிருக்கு சம உரிமைகளை வழங்குவதற்கான சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
- **இலக்கு 5.b & 5.c:** மின்னணு வங்கிச் சேவைகள், கைபேசி பயன்பாடு போன்ற தொழில்நுட்பங்களில் பாலின சமத்துவத்தை உறுதி செய்ய வலுவான கொள்கைகள் மற்றும் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

**SDG – 8: கண்ணியமான வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி**

- **இலக்கு 8.3:** தொழில்முனைவு, முறையான வேலைவாய்ப்புகள் மற்றும் குறு, சிறு

மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் கொள்கைகளை முன்னெடுத்தல்.

- **இலக்கு 8.5:** அனைத்து மகளிருக்கும் முழுமையான மற்றும் பயனுள்ள வேலைவாய்ப்புகளையும், சம மதிப்புடைய பணிக்கு சம ஊதியம் வழங்கிட உறுதி செய்தல்.
- **இலக்கு 8.10:** அனைவருக்கும் வங்கி சேவைகள், காப்பீடு மற்றும் தொழில்முனைவு மூலதன நிதி பெறுவதை உறுதிசெய்யும் வகையில் உள்நாட்டு நிதி நிறுவனங்களை வலுப்படுத்துதல்

### 1.3.2. தேசியச் சூழல்

பெண்களின் பொருளாதாரப் பங்கேற்பு மற்றும் நிதி உள்ளாக்கத்தில் தமிழ்நாடு, இந்திய அளவில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது.

இதனை நிதி ஆயோக் வெளியிட்ட *"From Borrowers to Builders: Women's Role in India's Financial Growth Story"* மற்றும் SDG India Index அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன. இந்திய அளவில் பெண் கடன் பெறுவோரில் 44 சதவீதத்தினர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், தேசிய அளவில் இம்மாநிலம் முதலிடத்தில் உள்ளது. மேலும், இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களில் சுமார் 42 சதவீதம்பேர் தமிழ்நாட்டில் பணியாற்றுகின்றனர்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகம் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் 9 உள்ளூர் மயமாக்கப்பட்ட நீடித்த–நிலைத்த வளர்ச்சி இலக்குகளை (Localised Sustainable Development Goals – LSDGs) வகுத்துள்ளது. அவற்றில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தும் வாழ்வாதார இயக்கங்கள்

பின்வரும் இலக்குகளை முன்னெடுத்து வருகின்றன:

- **LSDG 1:** வறுமையற்ற கிராம ஊராட்சி
- **LSDG 5:** தூய்மையான மற்றும் பசுமையான கிராமம்
- **LSDG 8:** சமூக நீதி மற்றும் சமூகப் பாதுகாப்பு கொண்ட கிராம ஊராட்சி
- **LSDG 9:** பெண்களுக்கு உகந்த கிராம ஊராட்சி

**தமிழ்நாடு குறித்த முக்கிய செயல்திறன் கண்டறிதல்கள்**

- **நீடித்த–நிலைத்த வளர்ச்சி இலக்கு (SDG) – 1 மதிப்பெண்:** "*வறுமையின்மை"* என்ற அளவுகோலில், தமிழ்நாடு 100–க்கு 92 மதிப்பெண்கள் பெற்று, வலுவான சமூகநலப் பாதுகாப்பு வழங்கியதை நிதி

ஆயோக் SDG இந்தியா குறியீட்டில் வெளிப்படுத்தியுள்ளது.

- **வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள்தொகை விகிதம்:** மாநில மக்கள் தொகையில் 2.20 சதவீதம் பேர் மட்டுமே பன்முக வறுமை நிலையில் உள்ளனர்.
- **நிதி உள்ளாக்கம்:** நாட்டின் சராசரியான 31 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 44 சதவீத மகளிர் கடன் பெற்று தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- **தொழில்துறை பணியாளர்:** இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களில் (14.9 இலட்சம் மகளிரில், சுமார் 6.3 இலட்சம்) 42 சதவீதம்பேர் தமிழ்நாட்டில் பணியாற்றுகின்றனர். இப்பங்களிப்பு முக்கியமாக ஜவுளி, மின்னணு மற்றும்

வாகன உதிரிபாகத் தொழில்களில் காணப்படுகிறது.

- **குறு தொழில்முனைவு:** தேசிய புள்ளிவிவரப்படி, மகளிரால் நடத்தப்படும் குறுந்தொழில் நிறுவனங்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அதிகளவில் செயல்படும் தென்மாநிலங்களில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.
- **முதன்மை பரிமாண அளவீடுகள்:** சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத் தரம் உள்ளிட்ட 12 முக்கியக் குறியீடுகள் (ஊட்டச்சத்து, சுகாதாரம், குடிநீர் போன்றவை).
- **நீடித்த–நிலைத்த வளர்ச்சி இலக்கு (SDG) செயல்திறன்:** நிதி ஆயோக் SDG இந்தியா குறியீட்டில், பாலின சமத்துவம், பாலின விகிதம் மற்றும் மகளிர் கல்வியறிவு போன்ற அளவுகோல்களில் தமிழ்நாடு

78/100 என்ற ஒட்டுமொத்த மதிப்பெண்ணுடன், தேசிய சராசரியை விட உயர்ந்த செயல்திறன் கொண்ட "முன்னணி மாநிலம்" என்ற நிலையைப் பெற்றுள்ளது.

### 1.3.3. தமிழ்நாடு – கொள்கைச் சூழல்

தமிழ்நாட்டின் வளர்ச்சி மாதிரியானது, சமூக நீதி, அனைவருக்குமான நல்வாழ்வு மற்றும் பாலின சமத்துவம் ஆகியவை பொருளாதாரத்தின் முக்கிய இயக்க சக்திகள் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் அதிக நகரமயமாக்கப்பட்ட மற்றும் தொழில்மயமாக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாகத் திகழும் தமிழ்நாடு உயர்ந்த மனித வள மேம்பாட்டுக் குறியீடு, தொடக்கக் கல்வியில் கிட்டத்தட்ட முழுமையான சேர்க்கை, குறைந்த தாய்மார் மற்றும் குழந்தை இறப்பு விகிதம் போன்ற பல்வேறு சமூக முன்னேற்றக் குறியீடுகளில் சிறந்து விளங்குகிறது.

தமிழ்நாட்டில் பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு, பல்வேறு சாதனைகளையும் கவனம் செலுத்த வேண்டிய அம்சங்களையும் வெளிப்படுத்துகிறது. இந்திய அளவில், தொழிற்சாலைகளில் பணிபுரியும் மகளிரில் 42 சதவீதம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், தொழில்துறையில் மகளிர் பங்கேற்பதில் தேசிய அளவில் இம்மாநிலம் முன்னணியில் உள்ளது. மாநிலத்தின் பெண் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (Female Labour Force Participation Rate – FLFPR) ஊரகப் பகுதிகளில் சுமார் 35 சதவீதமாகவும், நகர்ப்புரங்களில் 23 முதல் 25 சதவீதமாகவும் உள்ளது. இது தேசிய வரலாற்றுச் சராசரியை விட அதிகமாகும்.

இத்தகைய முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், சில கட்டமைப்பு சார்ந்த ஏற்றத்தாழ்வுகள் நீடிக்கின்றன.

- மகளிர், ஊதியமின்றி மேற்கொள்ளும் பராமரிப்பு பணிகளில், ஆண்களை விட சராசரியாக 2.5 முதல் 4 மடங்கு அதிக நேரத்தை செலவிடுகின்றனர்.

- நிலம் அல்லது மூலதனச் சொத்துகளின் நேரடி உரிமையை 13.96 சதவீத மகளிர் மட்டுமே பெற்றிருப்பதால், சொத்து உரிமையில் குறிப்பிடத்தக்க இடைவெளி நீடிக்கிறது.

- பாலின அடிப்படையிலான ஊதிய வேறுபாடுகள், முறைசாரா துறைகளில் தொழில்சார் பிரிவினை மற்றும் தொழில்முனைவு மூலதனம், தொழில்நுட்பம் மற்றும் ஏற்றுமதி சந்தைகளை அணுகுவதில் தடைகள் உள்ளன.

## 1.4. 2026−27 ஆம் ஆண்டிற்கான முன்னெடுப்பு முயற்சி

### 1.4.1. சிங்கப்பெண்கள் வலிமைப்படுத்தும் திட்டம்

சுய உதவிக் குழுக்களின் தொழில் நிறுவனங்கள் வாழ்வாதாரத்தை மட்டுமே சார்ந்த சிறிய அளவிலான தொழில்களிலிருந்து, போட்டித்திறன் மிக்க, வளர்ச்சி நோக்கிய மற்றும் சந்தை சார்ந்த தொழில் நிறுவனங்களாக மாற்றும் நோக்கில், தமிழ்நாடு அரசு "சுய உதவிக் குழு – குழு நிறுவன முதலீட்டு மானியத் திட்டத்தை" செயல்படுத்த உள்ளது. இதுவரை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட நுண் தொழில் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும், தொடர்ந்து செயல்பட்டு வரும் பல தொழில் நிறுவனங்கள் உற்பத்திச் சொத்துகளை உருவாக்குதல், நவீன தொழில்நுட்பங்களைப்

பயன்படுத்துதல், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் சந்தை விரிவாக்கம் போன்ற நீண்டகால முதலீட்டுத் தேவைகளுக்கான போதிய மூலதன வசதி இல்லாத காரணத்தால் வளர்ச்சியில் பல்வேறு கட்டமைப்புச் சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. தற்போது நடைமுறையில் உள்ள நிதிசேவைகள் பெரும்பாலும் குறுகிய கால செயல்பாட்டு மூலதனத் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்வதால், இந்நீண்டகால முதலீட்டு இடைவெளியை நிரப்பும் வகையில், தகுதியுடைய சுய உதவிக் குழு தொழில் நிறுவனங்களுக்கு வெளிப்படையான மதிப்பீடு மற்றும் தரப்படுத்தல் முறையின் அடிப்படையில் **ரூ.5.00 இலட்சம் வரை முதலீட்டு மானியம்** வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி வசதிகளை நவீனமயமாக்குதல், மதிப்புக்கூட்டப்பட்ட

உற்பத்தியை ஊக்குவித்தல், தரநிலைகளை மேம்படுத்துதல் மற்றும் வழங்கல் சங்கிலி (Supply Chain) இணைப்புகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் உற்பத்தித் திறனை உயர்த்தி, பொதுச் சந்தை, நிறுவனச் சந்தை மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளில் தங்களது பங்களிப்பை விரிவுபடுத்தும் வகையில் ஊக்குவிக்கப்படும். மேலும், தொழில் நிறுவனங்கள் முறைப்படுத்தப்பட்ட தொழில்களாக வளர்ச்சியடைவதற்கும், நிலையான உள்ளூர் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், மகளிர் தொழில்முனைவோரின் பொருளாதார வலிமை மற்றும் போட்டித்திறனை மேம்படுத்துவதற்கும், தமிழ்நாட்டின் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பதற்கும் இத்திட்டம் வழிவகுக்கும். *[SDG இலக்குகள் :1.4, 5.a மற்றும் 8.3]*

2031ஆம் ஆண்டிற்குள், சுய உதவிக் குழுக்களை அடிப்படையாகக் கொண்ட வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் முன்னோடி மாநிலமாகத் திகழும் தமிழ்நாடு, பெண்கள் தலைமையிலான பொருளாதார வளர்ச்சிக்கான நாட்டின் முன்மாதிரி மாநிலமாக தன்னை நிலைநிறுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு மகளிர் சுய உதவிக் குழுவும் நிதி உள்ளடக்கத்தைப் பெறுவதோடு மட்டுமின்றி, பொருளாதார ரீதியாக வலுவூட்டப்பட்ட அமைப்பாக வளர்ச்சியடைவதையும், தமிழ்நாட்டின் ஒவ்வொரு "சிங்கப்பெண்ணும்" சுய உதவிக் குழு உறுப்பினர் நிலையிலிருந்து தொழில் நிறுவன உரிமையாளராக உயர்வதற்கான நம்பகமான வாய்ப்பை பெறுவதை உறுதி செய்வதே இத்தொலைநோக்கின் முக்கிய நோக்கமாகும்.

## 1.5. வெற்றித் தமிழகம் தொலைநோக்குப் பார்வையை நோக்கி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தை புதிய கண்ணோட்டத்துடன் மறுசீரமைத்தல்

தமிழ்நாடு அரசு பின்வருவனவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது:

- வளர்ச்சி, மீள்திறன் மற்றும் புத்தாக்கத்தை வளர்க்கும் மகளிரின் தலைமையிலான நிறுவனங்களின் ஒரு புரட்சிகரமான இயக்கத்தை முடுக்கிவிடுதல், அதே வேளையில், அடிதள அளவிலான உற்பத்தியாளர்களை மண்டல, தேசிய மற்றும் உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளுடன் (Value chains) தடையின்றி ஒருங்கிணைக்க வழிவகை செய்தல்.
- தமிழ்நாட்டின் சுய உதவிக் குழு அமைப்பை, உலகளவில் போட்டித்திறன்

மிக்க, மின்னணு தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்தி வலையமைப்பாக மறுசிந்தனை செய்து, பரந்த அளவிலான சந்தை ஒருங்கிணைப்பை பயன்படுத்தி, சுய உதவிக் குழு மகளிர் தொழில்முனைவோரை வாழ்வாதாரத்தை மட்டுமே சார்ந்த தொழில்களிலிருந்து, நிலையான, கண்ணியமான மற்றும் ஆண்டு முழுவதும் வருமானப் பாதுகாப்பை வழங்கும் தொழில்முனைவோராக மாற்றுவது.

- நீண்டகால சமூக–பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, தலைமுறை தலைமுறையாகத் தொடரும் வறுமையை ஒழிப்பதிலும், எதிர்காலத்திற்குத் தயாரான சமூகத்தைக் கட்டமைப்பதிலும் மாநில அரசின் உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்தும்

வகையில், அனைவருக்கும் சமமான நிதி ஆதாரங்களை அணுகும் வாய்ப்பு, செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் தொழில்துறை 5.0 சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி, தொழில்முனைவோருக்கான ஆதரவு மற்றும் சந்தை இணைப்புகளை உறுதிசெய்தல்.

இவ்விலக்குகளைத் திறம்பட அடைவதற்கு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பின்வரும் வழிகளில் தனது நிர்வாகக் கூறுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது:

- தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனக் கட்டமைப்பின் கீழ் ஒருங்கிணைப்பை மேம்படுத்தி, பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல்திட்டங்களுக்கிடையேயான இடைவெளியை குறைத்து, வளங்களின்

முழுமையான பயன்பாட்டை உறுதிசெய்வது, மேலும் ஒருங்கிணைந்த, திறன்மிக்க மற்றும் பொறுப்புணர்வோடு திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம், ஒவ்வொரு மகளிருக்கும் நிலையான வாழ்வாதார வாய்ப்புகள் கிடைப்பதையும், உலகளாவிய சந்தைகளில் தனிநபராகவோ அல்லது கூட்டாகவோ பங்கேற்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதை உறுதிசெய்தல்.

- அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நிதிப் பரிவர்த்தனையையும் முழுமையாகக் கண்காணிக்கும் வகையில், முழுமையான மின்னனு நிதி மற்றும் செயல்பாட்டு மேலாண்மை அமைப்பு உருவாக்கப்பட்டு, வெளிப்படைத்தன்மை, நிகழ்நேர பொறுப்புடைமை மற்றும் தரவு

அடிப்படையிலான நிர்வாகம் உறுதி செய்யப்படும்.

- மாநிலத்தின் "மதி" பிராண்டின் கீழ் வலுவான, எதிர்காலத்திற்குத் தயாரான விநியோக இணைப்புகளை உருவாக்குதல், உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேசச் சந்தைகளுக்குத் தடையின்றிச் சேவையாற்றக்கூடிய உற்பத்தி, திரட்டல் மற்றும் விநியோகத் திறன்களை வலுப்படுத்துதல்.

# 2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

## 2.1 பின்னணி

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஊரகப் பகுதிகளில் வறுமையை ஒழிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு மற்றும் மாநில அரசால் முறையே 60:40 என்ற விகிதாசாரத்தில் இவ்வியக்கத்திற்கு நிதி வழங்கப்படுகிறது,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஊரகக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான சமூக–பொருளாதாரப் பாதிப்புகளை நிவர்த்தி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட செயல்திட்டக் கட்டமைப்பை வழங்குகிறது. சுய உதவிக்குழுக்கள், கூட்டமைப்புகள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் போன்ற சமூக

அடிப்படையிலான நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம், மாநிலத்தின் அனைத்து 37 மாவட்டங்களிலும் நிதி உள்ளாக்கம், நீடித்த–நிலையான வாழ்வாதார மேம்பாடு, சந்தை இணைப்புகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்தி வருகிறது.

மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும் நிர்வாகக் கட்டமைப்பு, ஒருங்கிணைந்த அமைப்பின் மூலம் செயல்படுகிறது.

1. **மாநில இயக்க மேலாண்மைப் அலகு (State Mission Mannagement Unit):** தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தலைமை செயல் அலுவலர் / தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரின் கீழ் மாநில இயக்க மேலாண்மை அலகு செயல்படுகிறது. இது மாநில அளவிலான கொள்கை வகுத்தல், நிதி ஒதுக்கீடு,

துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைவு மற்றும் இயக்கத்தின் ஒட்டுமொத்த செயல்பாடுகளை கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

**2. மாவட்ட இயக்க மேலாண்மைப் அலகு (District Mission Management Units):** மாநிலத்தில் சென்னை நீங்கலாக அனைத்து (37) மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் இவ்வமைப்பானது இணை இயக்குநர்கள் / திட்ட இயக்குநர்களின் தலைமையின் கீழ் உதவி திட்ட அலுவலர்களைக் கொண்டு செயல்படுகிறது. இது கள செயல்பாடுகள், வங்கி கடன் இணைப்பு, மாவட்ட வளத் திட்டமிடல் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

**3. வட்டார இயக்க மேலாண்மைப் அலகு (Block Mission Management Units):** அனைத்து (388) வட்டாரங்களிலும் செயல்பட்டு வரும் இவ்வமைப்பு, வட்டார இயக்க மேலாளர்கள் தலைமையின் கீழ் வட்டார ஒருங்கிணைப்பாளர்களைக் கொண்டு இயங்குகிறது. இது நேரடி கள அளவிலான பணிகள், சமுதாயம் சார்ந்த அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் திட்ட மேலாண்மை பணிகளை மேற்கொள்கிறது.

**4. சமுதாயம் சார்ந்த அமைப்புகள்:** தன்னாட்சி முறையில் செயல்படும் நிறுவன மையம் அமைக்கும் பொருட்டு கீழ்கண்ட சமுதாயம் சார்ந்த அமைப்புகள் செயல்படுகின்றன.

**அ) சுய உதவிக் குழுக்கள்:** 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட குழுக்கள்

**ஆ) ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்:** கிராம ஊராட்சி அளவில் பதிவு செய்யப்பட்ட அமைப்புகளாக செயல்படும் இவை, அந்தந்த கிராம ஊராட்சியில் செயல்படும் அனைத்து சுய உதவிக் குழுக்களையும் ஒருங்கிணைக்கும் கூட்டமைப்பு.

**இ) வட்டார அளவிலான கூட்டமைப்புகள் (Block Level Federations):** வட்டார அளவில் சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட கூட்டமைப்புகளாக செயல்பட்டு, மேம்பட்ட நிதி மற்றும் தொழில் முனைவோர் சார்ந்த சேவைகளை வழங்குகின்றன.

**ஈ) உற்பத்தியாளர் குழுக்கள் (Producer Groups) & உற்பத்தியாளர் நிறுவனங்கள் (Producer Enterprises):** குறிப்பிட்ட வேளாண்மை மற்றும் வேளாண்மை சாரா மதிப்புச் சங்கிலிகளை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட பொருளாதார நோக்கிலான சமுதாயம் சார்ந்த அமைப்புகள்.

## 2.2. 2026–27ஆம் ஆண்டிற்கான செயல்திறன் உத்திகள் மற்றும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள்

### 2.2.1. முழுமையான சமூக ஒருங்கிணைத்தல் மற்றும் சுய உதவிக் குழுக்கள் தன்னிறைவை அடைதல்

- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தகுதியுடைய ஊரக ஏழை குடும்பங்களை 100 சதவீதம் சுய உதவிக்

குழுக்களில் இணைத்தல். *[SDG இலக்குகள் 1.2, 1.4 & 5.a]*

- அனைத்து 12,524 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் 388 வட்டார அளவிலான கூட்டமைப்புகள் (BLFs) ஆகியவற்றிலும் மின்னணு கணக்கியல் முறைக்கு முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தி, வங்கி அமைப்புகளுடன் நேரடி ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல். *[SDG இலக்குகள் 5.b & 8.10]*

### 2.2.2. நிதி உள்ளாக்கம் மற்றும் கடன் பெறுவதை வலுப்படுத்துதல்

- ஊரக சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பின் மூலம் ரூ.38,000 கோடி கடன் வசதியை திரட்டுதல் *[SDG இலக்குகள் 1.4, 5.a & 8.10]*

- ஊரகப் பகுதிகளில் சமுதாயம் சார்ந்த அமைப்புகளில் நிதி சார் கல்வி மற்றும் மின்னணு வங்கி சேவைகளைப் பயன்படுத்தும் நடைமுறையை விரிவுபடுத்துதல். *[SDG இலக்குகள் 5.b & 8.10]*

### 2.2.3. வாழ்வாதாரம் மற்றும் குடும்ப வருமானத்தை மேம்படுத்துதல்

- ஊரகப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழு குடும்பங்களில் 35 சதவீத குடும்பங்கள், ஆண்டிற்கு குறைந்தபட்சம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேல் வருமானம் பெறுவதை உறுதி செய்தல். *[SGD இலக்குகள் : 1.1, 1.2 மற்றும் 8.5]*
- மாநிலம் முழுவதும் 15,000 சுய உதவிக் குழு மகளிர் நடத்தும் தொழில் நிறுவனங்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படும். *[SDG இலக்குகள் 1.4 & 5.a]*

## 2.3. திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள்

### 2.3.1. நிறுவன கட்டமைப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், அனைத்து ஏழைக் குடும்பங்களையும் சுய உதவிக் குழுக்களின் கீழ் ஒருங்கிணைப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. இலக்கு பயனாளிகளைத் தேர்வு செய்வதில் ஏற்படக்கூடிய பாகுபாட்டைத் தவிர்க்கும் வகையில் மக்கள் பங்கேற்புடன் ஏழைகளை அடையாளம் காணுதல் முறை பின்பற்றப்படுகிறது. இம்முறையில் மக்களே தங்களது சமூகபொருளாதார நிலையை அடிப்படையாகக் கொண்டு ஏழை, மிகவும் ஏழை மற்றும் நலிவுற்றோர்களை அடையாளம் காண்கின்றனர். நெடுங்காலமாக புறக்கணிக்கப்பட்ட சமூகங்களை முன்னுரிமைப்படுத்தும், சிறப்பு இலக்கு

அடிப்படையிலான ஒருங்கிணைப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன:

- **பட்டியலினத்தவர் / பழங்குடியினர் (SC/ST) உள்ளாக்கம்:** பழங்குடியினர் வாழும் பகுதிகள் மற்றும் பட்டியலினத்தவர் குடியிருப்புகளில் சிறப்பு சமூக ஒருங்கிணைப்பு இயக்கங்கள் மூலம், 100 சதவீதம் குடும்பங்களும் சுய உதவிக் குழுக்களில் இணைக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

- **சிறப்புப் பிரிவு சுய உதவிக் குழுக்கள்:** மாற்றுத்திறனாளிகள், முதியோர், திருநங்கைகள் மற்றும் மிகவும் நலிவுற்ற பழங்குடியினர்கள் ஆகியோர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் சிறப்பு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகிறது.

- **நலிவுற்றோர்களை அடையாளம் காணுதல் கணக்கெடுப்பு:** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், தகுதியான பயனாளிகளை அடையாளம் காணும் செயல்முறையில் மக்களின் பங்கேற்பின் மூலம், சுகாதார நெருக்கடி அல்லது சமூக நெருக்கடிகளை எதிர்கொள்ளும் குடும்பங்களை அடையாளம் காண்கின்றன. இக்குடும்பங்களுக்கு, இலக்கு அடிப்படையில் நலிவு நிலை குறைப்பு நிதி வழங்கப்படுகிறது.

| நிறுவனம் | அமைப்பு | அடைந்த வளர்ச்சி |
|---|---|---|
| **சுய உதவிக் குழுக்கள்** | மகளிர் சுய உதவிக் குழுக்கள்: 12 முதல் 20 ஊரக மகளிர் சிறப்பு சுய உதவிக் குழுக்கள்: குறைந்தபட்சம் 5 உறுப்பினர்கள் ஐந்து முக்கிய கோட்பாடுகளை பின்பற்றுதல் | 388 வட்டாரங்களில் 40.61 இலட்சம் மகளிரை ஒருங்கிணைத்து 3.51 இலட்சம் செயல்பாட்டிலுள்ள ஊரக மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன |

| | | |
|---|---|---|
| **குடியிருப்பு அளவிலான மன்றம்** | ஒரே ஒரு குடியிருப்பு: 20 சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு குடியிருப்பு அளவிலான மன்றம். ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகள்: 5 முதல் 20 சுய உதவிக் குழுக்கள் – ஒரு குடியிருப்பு அளவிலான மன்றம் 21க்கு மேற்பட்ட சுய உதவிக் குழுக்கள் – ஒவ்வொரு 20 சுய உதவிக் குழுக்களுக்கும் ஒரு குடியிருப்பு அளவிலான மன்றம் | தகுதியுடைய அனைத்து குடியிருப்புகளிலும் அமைக்கப்பட்டுள்ளது. |
| **கிராம வறுமை ஒழிப்பு சங்கம்** | 10–20 உறுப்பினர்கள் – ஊராட்சி மன்ற தலைவர் – கௌரவத் தலைவர், நலிவுற்றோர் மற்றும் மக்கள் பங்கேற்புடன் | 12,850 செயல்பாட்டிலுள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் (472 சிறப்புக் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட) |

| | | |
|---|---|---|
| | ஏழைகளை அடையாளம் காணுதல் (PIP) மூலம் கண்டறியப்பட்டவர்களுக்கு முன்னுரிமை | |
| **ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு** | ஒரு ஊராட்சியில் குறைந்தபட்சம் 10 சுய உதவிக் குழுக்கள். தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்டவை | 12,524 செயல்பாட்டிலுள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் |
| **வட்டார அளவிலான கூட்டமைப்பு** | அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வட்டார அளவில் ஒருங்கிணைத்தல். தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்டவை | 388 வட்டார அளவிலான கூட்டமைப்புகள் அனைத்து வட்டாரங்களிலும் அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. |
| **மக்கள் கற்றல் மையம் (MaKaMai)** | மாவட்ட அளவில் அனைத்து வட்டார அளவிலான கூட்டமைப்புகளை | தமிழ்நாட்டின் 37 மாவட்டங்களிலும் செயல்பட்டு |

| | | |
|---|---|---|
| | (BLFs) ஒருங்கிணைக்கும் உச்ச நிலை அமைப்பு ஆகும். இது தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட அமைப்பு. | வருகிறது. |

### 2.3.2. திறன் வளர்ப்பு (Capacity Building)

திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் மிகவும் முக்கியமானவை. அதன்படி, 2026–27 ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள 20,000 சுய உதவிக் குழுக்களின் ஊக்குநர், பிரதிநிதி மற்றும் உறுப்பினர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள் உள்ளிட்ட பிற சமுதாய அடிப்படையிலான அமைப்புகளுக்கு நிர்வாகம்

மற்றும் நிதி மேலாண்மை தொடர்பான பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து திறன் வளர்ப்பு பயிற்சிகளும் மக்கள் கற்றல் மையத்தின் கீழ் செயல்படும் சமுதாய மேலாண்மை பயிற்சி மையங்கள் (Community Managed Training Centres – CMTCs) வாயிலாக மட்டுமே வழங்கப்படுகின்றன.

**சமுதாய பயிற்றுநர்கள் (Community Trainers)**

தமிழ்நாட்டின் 37 மாவட்டங்களிலும், மக்கள் கற்றல் மையம் (MaKaMai) / சமுதாய மேலாண்மை பயிற்சி மையங்கள் (CMTCs) மூலம், மாநிலம் / மாவட்டம் / வட்டாரம் / கிராமம் ஆகிய அனைத்து நிலைகளிலும் 58,893 சமுதாய பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு (Model Cluster Level Federation – MCLF)**

2026-2027 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் 88 வட்டாரங்களில், 3,343 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சியானது மூன்று கட்டங்களாக – தொலைநோக்குப் பார்வை (Visioning), ஆண்டு செயல் திட்டம் (Annual Action Plan – AAP) மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டம் (Business Development Plan – BDP). இதுவரை 300 வட்டாரங்களில், 9,181 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு இப்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

**பயிற்சிகள் (Training)**

புதிதாக அமைக்கப்பட்ட சுய உதவிக் குழு ஊக்குநர்கள், பிரதிநிதிகள், மற்றும்

உறுப்பினர்கள், வட்டார அளவிலான கூட்டமைப்பு /ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை தொடர்பான பயிற்சிகள் முதன்மை பயிற்சியாக வழங்கப்படுகின்றன. மேலும், புத்தக பராமரிப்பாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

**கண்காணிப்பு (Monitoring)**

'மதிக்களம்' இணையமுகப்பு ('Mathikalam' Portal) வாயிலாக அனைத்து பயிற்சிகளுக்கும் பயிற்சி கால அட்டவணை, விவரங்கள் மற்றும் பயிற்சி தொடர்பான புகைப்படங்கள் பதிவேற்றப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

**2026-2027 ஆம் ஆண்டில், சமூக பயிற்றுநர்களின் சேவையைப் பயன்படுத்தி, 3.51 இலட்சம் சுய உதவிக் குழுக்களுக்கு**

**தேவையான பயிற்சிகள் ரூ.56 கோடி மதிப்பீட்டுச் செலவில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.**

### 2.3.3. நிதி உள்ளாக்கம் மற்றும் கடன் வழங்கும் முறை

நிதி உள்ளாக்கம் (Financial Inclusion) என்பது கிராமப்புற ஏழை மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய மற்றும் நம்பகத்தன்மை மிக்க நிதிச் சேவைகளை எளிதில் அணுகக்கூடிய முறையில் வழங்குவதை உறுதிசெய்யும் இன்றியமையாத ஒரு செயல்முறையாகும். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலமாக இதனை மேலும் விரிவுபடுத்துகிறது. இதன் மூலம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் சேமிப்புக் கணக்குகளைத் திறக்கவும், நிறுவனரீதியான கடன் வசதிகளைப் பெறவும், காப்பீடு மற்றும் ஓய்வூதியத் திட்டங்களில் இணையவும் வாய்ப்பு பெறுகின்றனர்.

இதே வேளையில், சமூகத்தால் நிர்வகிக்கப்படும் நிதி அமைப்பிலிருந்து, படிப்படியாக முறையான வங்கி அமைப்புடன் முழுமையாக இணைவதை நோக்கி இந்த அமைப்பு நகர்கிறது.

பின்வரும் உத்திகள், சுய உதவிக் குழுக்களை சிறிய சேமிப்புத் தளத்திலிருந்து முறையான நிறுவனரீதியான வங்கிக் கடனுக்கு மாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன:

i. **ஊரகப் பகுதிகளுக்கான சமுதாய அடிப்படையிலான நிதி**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் தரவரிசைப்படுத்தப்பட்ட சமுதாய நிதிகளை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது வழங்குகிறது. குழு ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாதங்கள் நிறைவடைந்து, பயிற்சி பெற்று, தர மதிப்பீடு செய்யப்பட்ட அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும், குழுவின் உள்கடன் வழங்கும்

திறனை மேம்படுத்தவும், உறுப்பினர்களை அதிக அளவிலான வங்கிக் கடன் பெறத் தயார்படுத்தவும், ஒரு குழுவிற்கு ரூ.15,000 வீதம் **சுழல் நிதி** வழங்கப்படுகிறது. 2025–26 ஆம் ஆண்டில், 9,500 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.14.25 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டது. **2026–27 ஆம் ஆண்டில், தகுதியுடைய 13,333 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.20 கோடி சுழல் நிதி வழங்கப்படும்.**

குழு அமைக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்த பின்னர், பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்பும் சுய உதவிக் குழுக்களுக்கு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம், ஒரு சுய உதவிக் குழுவிற்கு தலா ரூ.1.50 இலட்சம் வீதம், அதன் உறுப்பினர்களுக்கு 12% வட்டி விகிதத்தில் **சமுதாய முதலீட்டு நிதி** வழங்கப்படுகிறது. கடன் திரும்பசெலுத்தப்பட்ட பின்னர், இந்த நிதி பிற

சுய உதவிக் குழுக்களுக்கும் சுழற்சி முறையில் வழங்கப்படுகிறது. 2025-2026 ஆம் ஆண்டில், 6,003 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.90 கோடி சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்பட்டது. **2026-27 ஆம் ஆண்டில், தகுதியுடைய 6,800 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.102 கோடி சமுதாய முதலீட்டு நிதி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் வழங்கப்படும்.**

கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் நலிவு நிலை குறைப்புத் திட்டங்களை தயாரித்து, அவற்றை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் கிராம சபையின் ஒப்புதலைப் பெற்ற பின்னர், உணவுப் பாதுகாப்பின்மை, உடல் நல அவசரநிலைகள், இயற்கைப் பேரிடர்கள் மற்றும் பிற சமூகப் பொருளாதார பாதிப்புகளை எதிர்கொள்ள, ரூ.4,000/- முதல் ரூ.20,000/- வரை 0% முதல் 4% வரையிலான வட்டியில் **நலிவு நிலை குறைப்பு நிதி** வழங்கப்படுகிறது.

2025-2026 ஆம் ஆண்டில், இந்நிதியின் கீழ் 12,298 கிராம ஊராட்சிகளுக்கு ரூ.250.48 கோடி வழங்கப்பட்டது. **2026-27 ஆம் ஆண்டில், நலிவுற்றோர்களுக்கு ரூ.229.30 கோடி நலிவு நிலை குறைப்பு நிதி வழங்கப்படும்.**

சிறப்பு சுய உதவிக் குழுக்களுக்கு குறிப்பிட்ட வருமானம் ஈட்டும் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், ஒவ்வொரு குழுவிற்கும் ரூ.1.00 இலட்சம் **வாழ்வாதார நிதி** வழங்கப்படுகிறது. மேலும், சுய உதவிக் குழுக்களில் உள்ள மாற்றுத்திறனாளி மற்றும் திருநர் உறுப்பினர்களுக்கும், சுய உதவிக் குழுவில் உறுப்பினர் அல்லாத திருநர்களுக்கும் வருமானம் ஈட்டும் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள, தனிநபர் ஒருவருக்கு ரூ.40,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. **2026-27 ஆம் ஆண்டில், 1,250 சிறப்பு சுய உதவிக்**

**குழுக்களுக்கு ரூ.12.50 கோடி வாழ்வாதார நிதியும், 2,000 தனிநபர்களுக்கு ரூ.8.00 கோடி நிதியுதவியும் வழங்கப்பட உள்ளது.**

இந்த நான்கு வகையான நிதிகளின் கேட்பு வசூல் நிலுவை (Demand Collection Balance) விவரங்கள் ஒவ்வொரு மாதமும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் சுய உதவிக் குழு வாரியாக கண்காணிக்கப்பட்டு, மேலும் இவை வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் கண்காணிக்கப்படுகின்றன.

**ii. ஊரகப் பகுதிகளில் முறைசார் வங்கிக் கடன் வழங்கும் முறை**

**மகளிர் சுய உதவிக்குழு – வங்கி கடன் இணைப்புத் திட்டம்** மூலம் மகளிர் முறைசார் வங்கிச் சேவைகளுடன் இணைக்கப்பட்டு, பிணையில்லா கடன்களை குறைந்த வட்டி விகிதத்தில் பெறும் வாய்ப்பைப் பெறுவதுடன்,

அதிக வட்டி வசூலிக்கும் முறைசாரா நிதி நிறுவனங்களின் பிடியிலிருந்தும் பாதுகாக்கப்படுகின்றனர். **சுழல்நிதி** மற்றும் **சமுதாய முதலீட்டு நிதி** போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்ட போதிலும், சுய உதவிக் குழுக்கள் தங்களது தகுதிக்கேற்ப பல்வேறு அளவுகளில் தவணை காலக்கடனாகவோ அல்லது ரொக்க கடனாகவோ வங்கிகளில் இருந்து பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களின் பணம் எடுக்கும் திறன், ஆண்டுதோறும் மறு ஆய்வு செய்யப்பட்டு, மூன்று ஆண்டுகளுக்கு குறைந்தபட்ச ரொக்க கடன் வரம்பாக ரூ.6 இலட்சம், வங்கிகளால் நிர்ணயிக்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் ரூ.10 லட்சத்திற்கு மேல், ரூ.20 இலட்சம் வரையிலான கடன்களுக்கு, குறு தொழில்களுக்கான கடன் உத்தரவாத நிதித் திட்டம் (Credit Guarantee Fund for

Micro Units) பொருந்தும். இத்திட்டத்தின் கீழ், கடன் திருப்பிச் செலுத்துவதில் தவறு ஏற்பட்டால், வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பில் 75% வரை ஈடுசெய்யப்படும்.

2022-23 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ள ஒருங்கிணைந்த வட்டி மானியத் திட்டத்தின் கீழ், ரூ.3 இலட்சம் வரை வழங்கப்படும் கடன்களுக்கு வட்டி விகிதம் 7 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரூ.3 இலட்சம் முதல் ரூ.5 இலட்சம் வரை வழங்கப்படும் கடன்களுக்கு, வங்கியின் ஒரு வருட கடன் விளிம்புத் தொகை (MCLR) அல்லது 10 சதவீதம் இவற்றில் எது குறைவோ அதுவே நடைமுறை வட்டி விகிதமாக நிர்ணயிக்கப்படுகிறது. **2026-27 ஆம் ஆண்டில், 4,18,673 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.38,000 கோடி வங்கிக் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.**

**மகளிர் தலைமையிலான தொழில்நிறுவன நிதியுதவித் திட்டத்தின்** மூலம், குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளாக செயல்பட்டு, ஒரு கடன் சுழற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்கள், வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள், வேளாண்மை சார்ந்த பதப்படுத்தல், கனிம அடிப்படையிலான தொழில்கள், நலவாழ்வு மற்றும் அழகுசாதனப் பொருட்கள், கையால் தயாரிக்கப்படும் காகிதம், தோல் மற்றும் பிளாஸ்டிக் தொழில்கள், ஊரகப் பொறியியல், புதிய தொழில்நுட்பம் மற்றும் சேவைத் துறைகள் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த தொழில்களை விரிவுபடுத்த தனிநபர் தொழில் கடன் பெறும் வாய்ப்பைப் பெறுகின்றனர். இத்திட்டத்தின் கீழ், ரூ.5 இலட்சம் வரை வழங்கப்படும் தொழில்முனைவோர் கடன்களுக்கு, நிதி நிறுவனங்கள் வசூலிக்கும் கடன் உத்தரவாதக்

கட்டணம் அதிகபட்சம் ஐந்து ஆண்டுகள் வரை திருப்பி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், கடன் நிலுவைத் தொகை ரூ.1.50 இலட்சம் வரை உள்ள ஒவ்வொரு பயனாளிக்கும், தவணைகளை உரிய காலத்தில் செலுத்தும் பட்சத்தில் 2 சதவீத வட்டி மானியம் வழங்கப்படுகிறது. 2025–26 ஆம் ஆண்டில், 49,447 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.736.97 கோடி கடன் உதவி வழங்கப்பட்டு, அவர்கள் தொழில்முனைவோர்களாக முன்னேற வழிவகை செய்யப்பட்டது. **2026–27 ஆம் ஆண்டில், பண்ணைசார் அல்லாத மற்றும் பண்ணைசாரா தொழில்முனைவோர் நடவடிக்கைகளை மேற்கொள்ள 82,500 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.825 கோடி கடன் உதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.**

**iii. நிதிசார் அறிவு**

நிதிசார் அறிவை மேம்படுத்தும் நோக்கில், திட்டமிடல், சேமிப்பு, கடன், காப்பீடு, ஓய்வூதியம் மற்றும் மின்னணு நிதிச் சேவைகள் தொடர்பான வட்டார மொழி பயிற்சியில் திறன் பெற்ற 3,248 நிதிசார் கல்வி சமுதாய வளபயிற்றுநர்கள் பணியாற்றி வருகின்றனர். 2025-26 ஆம் ஆண்டில், 1,790 நிதிசார் கல்வி முகாம்கள் நடத்தப்பட்டு, 89,470 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். **2026-27 ஆம் ஆண்டில்**, **25,050 நிதிசார் கல்வி முகாம்கள் மூலம் 12.53 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயனடைய திட்டமிடப்பட்டுள்ளது.**

பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY), பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY), முதலமைச்சரின் விரிவான மருத்துவக்

காப்பீட்டுத் திட்டம் (CMCHIS) மற்றும் அடல் ஓய்வூதியத் திட்டம் (APY) ஆகியவற்றின் கீழ் 2025-26 ஆம் ஆண்டில், ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தில் 23.04 இலட்சம் உறுப்பினர்கள், விபத்து காப்பீட்டு திட்டத்தில் 33.64 இலட்சம் உறுப்பினர்கள், மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் 3.19 இலட்சம் உறுப்பினர்கள் மற்றும் ஓய்வூதியத் திட்டத்தில் 1.90 இலட்சம் உறுப்பினர்கள் இணைக்கப்பட்டனர். மேலும், இதே ஆண்டில், 56 விபத்து காப்பீட்டு கோரிக்கைகள் மற்றும் 139 ஆயுள் காப்பீட்டு கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட்டன.

**2026-27 ஆம் ஆண்டில், ஆயுள் காப்பீடு திட்டத்தில் 23.69 இலட்சம் உறுப்பினர்களையும், விபத்து காப்பீடு திட்டத்தில் 34.25 இலட்சம் உறுப்பினர்களையும் மற்றும் அடல் ஓய்வூதியத் திட்டத்தில் 1.10 இலட்சம் உறுப்பினர்களையும் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.**

ஒரு கிராம ஊராட்சி – ஒரு வங்கி வணிக தொடர்பாளர் இயக்கத்தின் கீழ், தகுதியுடைய சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு, இந்திய வங்கி மற்றும் நிதி நிறுவனம் (Indian Institute of Banking and Finance – IIBF) மூலம் சான்றிதழ் வழங்கப்பட்டு வங்கி வணிக தொடர்பாளர்களாக (Business Correspondents) நியமிக்கப்படுகின்றனர். 2025–26 ஆம் ஆண்டில், 971 மகளிர் வங்கி வணிக தொடர்பாளர்கள் பணியமர்த்தப்பட்டனர். 2026–27 ஆம் ஆண்டில், 1,000 சுய உதவிக் குழு உறுப்பினர்களை, வங்கி வணிக தொடர்பாளர்களாக நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சுய உதவிக் குழு–வங்கி கடன் இணைப்புத் திட்டத்தை (SHG–BLP) சிறப்பாக செயல்படுத்தும் வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளை ஊக்குவிக்கும் வகையில், விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும்,

2025-26 ஆம் ஆண்டில், 11,666 வங்கி அலுவலர்களுக்கு, இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதல்கள் தொடர்பாக அறிமுக பயிற்சி வழங்கப்பட்டது.

### 2.3.4. வாழ்வாதார உருவாக்கம் மற்றும் உற்பத்தியாளர் மற்றும் தொழில்முனைவோர் குழுக்களை முறைப்படுத்துதல்

பண்ணை மற்றும் பண்ணை சாரா துறைகளில் வருவாய் ஈட்டும் வாய்ப்புகளை விரிவுபடுத்தி, சுய உதவிக் குழு குடும்பங்களுக்கு ஆண்டு முழுவதும் நிலையான மற்றும் இலாபகரமான வருமானத்தை உறுதி செய்கிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், பெண்கள் தலைமையிலான உள்ளூர் தொழில்களை வலுப்படுத்தும் வகையில்,

நிலைத்த பயிர் சாகுபடி முறைகள், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் மற்றும் மதிப்பு இணைப்பின் அடிப்படையிலான ஒருங்கிணைந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலை ஊக்குவித்து வருகிறது.

i. **தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பண்ணை அடிப்படையிலான உற்பத்தியாளர் தொகுப்புகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், இயற்கை வேளாண்மை, ஒருங்கிணைந்த பண்ணையம், பயிர் சாகுபடி, கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட நிலையான வேளாண்–சூழலியல் (Agro–Ecological) நடைமுறைகளை, தொகுப்பு அடிப்படையிலான அணுகுமுறையின் மூலம் செயல்படுத்தி வருகிறது. இம்முறையில் உற்பத்திப் பொருட்கள் ஒருங்கிணைக்கப்பட்டு,

மதிப்புக்கூட்டப்பட்டு, தொகுப்பாக சந்தைப்படுத்தப்படுகின்றன. 2025-26 ஆம் ஆண்டில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் வேளாண்மை, தோட்டக்கலை, வனத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பட்டு வளர்ச்சி மற்றும் வேளாண் பொறியியல் துறைகளுடன் ஒருங்கிணைந்து 17 வகையான பண்ணை வாழ்வாதாரத் செயல்பாடுகளின் கீழ் பல்வேறு பண்ணைத் தொகுப்புகள் அமைக்கப்பட்டன.

**2026-27 ஆம் நிதியாண்டில், ரூ.35 கோடி மதிப்பீட்டில் 217 பண்ணை வாழ்வாதாரத் தொகுப்புகள் அமைக்கப்பட உள்ளன.**

| வாழ்வாதாரம் / தொகுப்பு செயல்பாடு | ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள தொகுப்புகள் | 2026-27 ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள தொகுப்புகள் | நிதி ஒதுக்கீடு மற்றும் முக்கிய அம்சங்கள் |
|---|---|---|---|
| **விதை உற்பத்தித் தொகுப்புகள் (பயறு வகைகள்)** | 100 | 50 | • ரூ.1 கோடி (2026-27)<br>• வேளாண்மைத் துறையின் ஒருங்கிணைப்புடன், 5 சுய உதவிக் குழு மகளிர் உறுப்பினர்களைக் கொண்டு உருவாக்கப்படும் ஒவ்வொரு தொகுப்பும் தரமான விதைகளை உற்பத்தி செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| **ஆடு வளர்ப்புத் தொகுப்புகள்** | 74 | 37 | • ரூ.7.40 கோடி (2026-27).<br>• ஒவ்வொரு தொகுப்பிலும் 20 சுய உதவிக் குழு மகளிர் உறுப்பினர்கள் இடம்பெறுவர். ஒவ்வொருவருக்கும் 9 பெண் ஆட்டு குட்டிகளும் 1 ஆண் ஆட்டுக் குட்டியும் வழங்கப்படும். ஏற்கனவே வழங்கப்பட்ட கால்நடைகள் முகவாய் (Muzzle) செயலி மூலம் அடையாளப்படுத்தப்பட்டு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. |
| **கறவை மாடு வளர்ப்புத் தொகுப்புகள்** | 148 | 74 | • ரூ.18.50 கோடி (2026-27).<br>• ஒவ்வொரு தொகுப்பிலும் 15 சுய உதவிக் குழு மகளிர் உறுப்பினர்கள் இடம்பெறுவர். கட்டாயக் காப்பீடு மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | அறிவியல் ரீதியான தீவன மேலாண்மை பயிற்சி மற்றும் 2 கறவை மாடுகள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும். ஏற்கனவே வழங்கப்பட்ட கால்நடைகள் முகவாய் (Muzzle) செயலி மூலம் அடையாளப்படுத்தப்பட்டு காப்பீடு செய்யப்பட்டுள்ளது |
| **பாரம்பரிய நெல் சாகுபடி தொகுப்புகள்** | 20 | 10 | • ரூ.1 கோடி (2026-27).<br>• பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாத்து, வணிகமயமாக்குவதில் கவனம் செலுத்துதல். |
| **பட்டுப்புழு வளர்ப்புத் தொகுப்புகள்** | 10 | 5 | • ரூ.1 கோடி (2026-27).<br>• பட்டுப்புழு வளர்ப்பை அடிப்படையாகக் கொண்ட வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துதல். |
| **ஒருங்கிணைந்த பண்ணையத் தொகுப்புகள்** | 260 | 10 | • ஒவ்வொரு தொகுப்பிற்கும் 3 ஆண்டுகளுக்கு ரூ.40 இலட்சம். |

| | | | |
|---|---|---|---|
| | | | • ஒவ்வொரு தொகுப்பிலும் 250–300 சுய உதவிக் குழு மகளிரை ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளில் ஈடுபடுத்துதல். |
| **இயற்கை பண்ணைத் தொகுப்புகள்** | 4 | 6 | • 3 ஆண்டுகளுக்கு ரூ.6.80 கோடி.<br>• எந்தவித இரசாயனங்களையும் பயன்படுத்தாமல், உயிரியல் இடுபொருட்களை பயன்படுத்தி உணவு தானியங்கள் மற்றும் காய்கறிகள் சாகுபடி செய்ய ஊக்குவித்தல், |
| **மருத்துவப் பயிர் சாகுபடி தொகுப்புகள்** | – | 5 | • 2026–27 ஆம் ஆண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் தொகுப்பு.<br>• ரூ.50 இலட்சம். |
| **மீன் வளர்ப்புத் தொகுப்புகள்** | – | 10 | • 2026–27 ஆம் ஆண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் தொகுப்பு.<br>• ரூ.10 இலட்சம். |

| | | | |
|---|---|---|---|
| **நாற்றங்கால் தொகுப்புகள்** | – | 4 | • 2026–27 ஆம் ஆண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் தொகுப்பு.<br>• ரூ.20 இலட்சம். |
| **மலர் சாகுபடி தொகுப்புகள்** | – | 6 | • 2026–27 ஆம் ஆண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் தொகுப்பு.<br>• ரூ.90 இலட்சம். |

### ii. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பண்ணை சாரா தொழில் நிறுவனங்கள் மற்றும் சந்தை இணைப்புகள்

பண்ணை சாரா வாழ்வாதார நடவடிக்கைகள், ஆண்டு செயல் திட்டங்கள், ஒருங்கிணைந்த கிராம தொடக்க தொழில் முனைவோர் திட்டக் கூறுகள் மற்றும் பிறதுறை ஒருங்கிணைப்பு திட்டங்களான பிரதம மந்திரியின் உணவு பதப்படுத்தும் நுண் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**கிராம தொடக்கத் தொழில் முனைவோர் திட்டம் (Start-up Village Entrepreneurship Programme – SVEP)**

கிராம தொடக்கத் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் ஊரக குடும்பங்கள் புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்கவும், ஏற்கனவே செயல்பட்டு வரும் தொழில்களை விரிவுபடுத்தவும் தேவையான முழுமையான ஆதரவுகளை சமுதாய வள வல்லுனர்கள் மூலம் வழங்கப்படுகிறது. சமுதாய வள வல்லுனர்கள் மூலம் தொழில் வழிகாட்டுதல், வணிகத் திட்டம் தயாரித்தல், நிதி இணைப்பு ஏற்படுத்துதல் மற்றும் தொழில் மேம்பாட்டு சேவைகளும் வழங்கப்படுகிறன. இதுவரை 7 மாவட்டங்களில் உள்ள 10 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2026-27ஆம் ஆண்டில் மேலும் 5 மாவட்டங்களில் உள்ள 5 வட்டாரங்களுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்து இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது.**

**ஓரிடச் சேவை (One Stop Facility – OSF)**

ஓரிடச் சேவை திட்டத்தின் மூலம், ஊரகக் குடும்பங்கள் நிலையான தொழில் நிறுவனங்களைத் தொடங்கி, அவற்றை வளர்ச்சியடையச் செய்வதற்குத் தேவையான தொழில் வழிகாட்டுதல், வணிகத் திட்டம் தயாரித்தல், நிதி வசதிகளைப் பெற்றுத் தருதல், சந்தை இணைப்புகள் உள்ளிட்ட முழுமையான தொழில் மேம்பாட்டுச் சேவைகள் வழங்கப்படுகின்றன. இதுவரை, 11 மாவட்டங்களில் உள்ள 35 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2026–27 ஆம் ஆண்டில், உயர்நிலை ஊரகத் தொழில் நிறுவனங்களை உருவாக்கும் நோக்கில், மேலும் 14 மாவட்டங்களில் உள்ள 28 வட்டாரங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது.**

**நுண் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (Micro Enterprise Development Programme – MED)**

நுண் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் மூலம், நுண் தொழில் நிறுவனங்களைத் தொடங்கி அவற்றை வளர்ச்சியடையச் செய்வதற்குத் தேவையான தொழில் மேம்பாட்டு சேவைகள், திறன் மேம்பாட்டு பயிற்சிகள், நிதி வசதிகளைப் பெற்றுத் தருதல் மற்றும் சந்தை இணைப்புகள் உள்ளிட்ட முழுமையான ஆதரவுகள் வழங்கப்படுகின்றன. இதுவரை, 7 மாவட்டங்களில் உள்ள 7 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2026–27 ஆம் ஆண்டில், ஊரகத் தொழில்முனைவோரை ஊக்குவித்து, நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கும் நோக்கில், இத்திட்டம் மேலும் 22 மாவட்டங்களில் உள்ள 36 வட்டாரங்களுக்கு விரிவுபடுத்தப்பட உள்ளது.**

**கிராமப்புற வாழ்வாதார விரைவு போக்குவரத்துத் திட்டம் (Aajeevika Grameen Express Yojana – AGEY)**

கிராமப்புற வாழ்வாதார விரைவு போக்குவரத்துத் திட்டமானது ஊரகப் பகுதிகளில் போக்குவரத்து இணைப்பை வலுப்படுத்தி, சந்தைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை எளிதில் அணுகுவதற்கான வசதியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், குறைந்த செலவில் நம்பகமான போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதன் மூலம், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நிலையான வாழ்வாதார வாய்ப்புகளையும் உருவாக்குகிறது. இதுவரை, இத்திட்டத்தின் கீழ் 72 வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. **மேலும் 2026–27 ஆம் ஆண்டில், கூடுதலாக 30 வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளன.**

**சமுதாயத் திறன் பள்ளிகள் (Community Skill Schools – CSS)**

சமுதாயத் திறன் பள்ளிகள் மூலம், ஊரக இளைஞர்களின் திறன் மற்றும் சந்தைத் தேவைகளுக்கு ஏற்ப தொழில்திறன் பயிற்சிகள் வழங்குவதன் மூலம், அவர்களின் வேலைவாய்ப்புத் திறன் மேம்படுத்தப்படுவதுடன், சுயதொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகளும் உருவாக்கப்படுகின்றன. கட்டிட கட்டுமானர், இருசக்கர வாகனப் பழுது பார்ப்பாளர், வீட்டு மின் சாதனப் பராமரிப்பாளர், ஜேசிபி இயக்குபவர் உள்ளிட்ட சுமார் 30 வருவாய் ஈட்டக்கூடிய தொழில்களில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. **2026–27ஆம் ஆண்டில் 100 சமுதாயத் திறன் பள்ளிகள் மூலம் 2,000 ஊரக இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.**

**பண்ணை சாரா தொகுப்புகள் / உற்பத்தியாளர் நிறுவனங்கள்**

ஒரே வகையான வாழ்வாதாரத் தொழிலில் ஈடுபட்டுள்ள 10 முதல் 50 சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து பண்ணை சாரா தொகுப்புகள் / உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன. இத்தொகுப்புகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள், செயல்பாட்டு மூலதனம், நிர்வாகச் செலவுகள், திறன் மேம்பாடு, தொழில்நுட்ப ஆதரவு முகமைகளை ஈடுபடுத்துதல், வணிக முத்திரையிடல் மற்றும் சந்தை இணைப்பு ஆகியவற்றிற்கு நிதி உதவி வழங்கப்படுகின்றன. இதுவரை 210 பண்ணை சாரா தொகுப்புகள் / உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. **2026–27ஆம் ஆண்டில் மேலும் 186 பண்ணை சாரா தொகுப்புகள் / உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.**

| வ. எண் | செயல்பாடு | 2026-27ஆம் ஆண்டில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள பண்ணை சாரா தொகுப்புகள் / உற்பத்தியாளர் நிறுவனங்கள் |
|---|---|---|
| 1 | வட்ட தலைமை இடங்கள் / அரசு அலுவகங்கள் / அரசு கல்லூரிகள் / அரசு தொழில்நுட்ப கல்லூரிகளில் உணவகங்கள் அமைத்தல் | 74 |
| 2 | எளிய வீட்டு உபயோக சுகாதார பொருட்கள் உற்பத்தித் தொகுப்புகள் அமைத்தல் | 37 |
| 3 | அரசுக் கல்லூரிகள் / அரசு தொழில்நுட்பக் கல்லூரிகள் / மேல்நிலைப் பள்ளிகளில் எழுதுபொருள் விற்பனை நிலையங்கள் அமைத்தல் | 37 |
| 4 | சமையல் எண்ணெய் உற்பத்தி மற்றும் விற்பனைத் தொகுப்புகள் அமைத்தல் | 9 |

| | | |
|---|---|---|
| 5 | பாரம்பரிய அரிசி மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் தொகுப்புகள் அமைத்தல் | 6 |
| 6 | சானிட்டரி நாப்கின் மற்றும் திசு காகிதம் உற்பத்தித் தொகுப்புகள் அமைத்தல் | 5 |
| 7 | உலர் மீன் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அமைத்தல் | 3 |
| 8 | மண்பாண்டத் தொகுப்புகள் அமைத்தல் | 3 |
| 9 | பாரம்பரிய சிற்றுண்டி மற்றும் சிறுதானிய மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தித் தொகுப்புகள் அமைத்தல் | 3 |
| 10 | மதிப்புக் கூட்டப்பட்ட பால் பொருட்கள் உற்பத்தித் தொகுப்புகள் அமைத்தல் | 2 |
| 11 | பனை ஓலைப் பொருட்கள் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அமைத்தல் | 2 |
| 12 | சலவைத் தொகுப்புகள் அமைத்தல் | 2 |
| 13 | அச்சக அலகு அமைத்தல் | 1 |
| 14 | தேயிலைப் பொருட்கள் உற்பத்தி தொழில் தொகுப்பு அமைத்தல் | 1 |

| | | |
|---|---|---|
| 15 | கழிவிலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் உருவாக்கும் தொகுப்பு அமைத்தல் | 1 |
| **மொத்தம்** | | **186** |

**பிரதம மந்திரியின் உணவுப் பதப்படுத்தும் நுண் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (Prime Minister's Formalisation of Micro Food Processing Enterprises Scheme – PMFME)**

உணவுப் பதப்படுத்தும் துறையில் செயல்பட்டு வரும் முறைபடுத்தப்படாத நுண் தொழில் நிறுவனங்கள், பிரதம மந்திரியின் உணவுப் பதப்படுத்தும் நுண் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டத்தின் மூலம் முறையான தொழில் நிறுவனங்களாக வளர ஆதரவு வழங்கப்படுகிறது. இதுவரை 26,496 நிறுவனங்களுக்கு விதை மூலதன நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. **2026-27ஆம் ஆண்டில் மேலும் 1,338 தொழில் நிறுவனங்களுக்கு தலா**

**ரூ.40,000/– வீதம் விதை மூலதன நிதி உதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.**

**iii. சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகள் சந்தைப்படுத்துதல் –"மதி" தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முதன்மை வணிக முத்திரை**

சுய உதவிக் குழு மகளிர் தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளுக்கான சந்தைத் தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கில், "மதி" என்ற முதன்மை வணிக முத்திரையின் கீழ், தரநிலைப்படுத்தப்பட்ட பொதியிடல் மற்றும் குறியிடலுடன் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகள் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன.

| வ. எண் | சந்தைப்படுத்தல் நடவடிக்கை | 2026-27 ஆம் ஆண்டின் இலக்கு | முக்கிய அம்சங்கள் |
|---|---|---|---|
| 1 | கண்காட்சிகள்/ சந்தைப்படுத்தல் நிகழ்வுகள் (Exhibitions / Marketing Event) | 90 | மாநில அளவிலும், பெருநகரங்களிலும் மற்றும் மாவட்டத் தலைமையிடங்களிலும் கண்காட்சிகள் மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்வுகள் நடத்தி, சுய உதவிக் குழு தயாரிப்புகளை நகர்ப்புர நுகர்வோரிடம் கொண்டு சேர்த்தல். |
| 2 | கல்லூரிச் சந்தைகள் (College Bazaar) | 200 | கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் சுய உதவிக் குழு தயாரிப்புகளை அறிமுகப்படுத்தி, |

| | | | |
|---|---|---|---|
| | | | இளம் தலைமுறை நுகர்வோரை சென்றடையச் செய்தல். |
| 3 | இயற்கைச் சந்தைகள் (Natural Bazaar) | 130 | இயற்கை வேளாண் விளைபொருட்களை ஊக்குவிக்கும் வகையில், மாநில அளவில் மாதம் இருமுறையும், மாவட்ட அளவில் காலாண்டிற்கு ஒருமுறையும் இயற்கைச் சந்தைகளை நடத்துதல். |
| 4 | அடுக்குமாடி குடியிருப்புச் சந்தைகள் (Apartment Bazaar) | 25 | நகர்ப்புர அடுக்குமாடி குடியிருப்புகளில் சந்தைகள் நடத்தி, |

| | | | |
|---|---|---|---|
| | | | சுய உதவிக் குழுக்களுக்கு நேரடி விற்பனை வாய்ப்புகளை ஏற்படுத்துதல். |
| 5 | நிறுவன வளாக சந்தைகள் (Corporate Bazaar) | 10 | நிறுவன வளாகங்களில் விற்பனை நிகழ்வுகளை நடத்தி, சுய உதவிக் குழு உற்பத்தியாளர்களை நிறுவனப் பணியாளர்களுடன் இணைத்தல். |
| 6 | கடற்கரை மற்றும் பூங்கா சந்தைகள் (Beach and Park Bazaar) | 10 | கடற்கரைகள் மற்றும் பூங்காக்களில் அதிகளவில் வருகை தரும் பொதுமக்களை |

| | | | |
|---|---|---|---|
| | | | இலக்காகக் கொண்டு, சுய உதவிக் குழுக்களின் பாரம்பரியம் மற்றும் தயாரிப்புகளின் தனித்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் விற்பனைச் சந்தைகளை நடத்துதல். |
| 7 | மதி அனுபவ அங்காடி (Mathi Experience Store) | 5 | சுய உதவிக் குழு மற்றும் உற்பத்தியாளர் தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளை காட்சிப்படுத்தி விற்பனை செய்ய பிரத்யேக அனுபவ |

| | | | |
|---|---|---|---|
| | | | விற்பனை அங்காடி அமைத்தல். |
| 8 | சுய உதவிக் குழு தயாரிப்புகளுக்கான மண்டல சந்தைப்படுத்தல் மையங்கள் (Regional Hub) | 4 | சுய உதவிக் குழு தயாரிப்புகளின் சந்தைப்படுத்தலை வலுப்படுத்துதல், மண்டல அளவில் உற்பத்திப் பொருட்களை ஒருங்கிணைத்தல், வழங்கல் சங்கிலியை மேம்படுத்துதல் மற்றும் பொதுச் சந்தை, நிறுவனச் சந்தைகளுக்கேற்ப தயாரிப்புகளை தரப்படுத்தலுக்காக மண்டல சந்தைப்படுத்தல் மையங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | அமைத்தல். |
| 9 | புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்ககளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் (Infrastructure facilities for DSMS) | 6 | சுய உதவிக் குழுக்கள் தங்களது தயாரிப்புகளை காட்சிப்படுத்தி, விற்பனை செய்வதற்கான மாவட்ட அளவிலான நிரந்தர சந்தைப்படுத்தலுக் கான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல். |

**2026-27 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழு பொருட்களை விற்பனை செய்ய ரூ.1,000/- கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை, பல்வேறு சந்தைப்படுத்தல் வழிகளின்**

**மூலம் ரூ.182.26 கோடி மதிப்பிலான சுய உதவிக் குழு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.**

**iv. தமிழ்நாடு அனைவரையும் உள்ளடக்கிய வாழ்வாதார திட்டம் (Tamil Nadu Inclusive Livelihood Programme)**

வழக்கமான உள்ளூர் தொழில் சார்ந்த வாழ்வாதாரத்தைப் பெற இயலாத, மிகவும் வறிய நிலையிலுள்ளவர்களுக்கு, தமிழ்நாடு அனைவரையும் உள்ளடக்கிய வாழ்வாதாரத் திட்டமானது (TNILP), காலவரையுடன் கூடிய படிப்படியான வழிகாட்டு முறையுடன் (Graduation Approach) வாழ்வாதாரத் திட்டங்களை அடைய வழி செய்கிறது. முதற்கட்டமாக (ரூ.21 கோடி மதிப்பீட்டில்) திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 6,000 குடும்பங்கள் பயன்பெற உள்ளனர்.

**2026-27 ஆம் ஆண்டில், இரண்டாம் கட்டமாக அரியலூர், கள்ளக்குறிச்சி, நாமக்கல், இராமநாதபுரம் மற்றும் சேலம் மாவட்டங்களில் 10,000 குடும்பங்கள் (ரூ. 37.50 கோடி மதிப்பீட்டில்) பயன்பெறவுள்ளன. கூடுதலாக, 2026-27 ஆம் ஆண்டில் மூன்றாம் கட்டத்தின் கீழ் 15,000 குடும்பங்களும் பயன் பெறும்.**

பயனாளிகளின் குடும்பங்கள் TNILP செயலியின் வறுமை மதிப்பீட்டுக் கருவி (PAT) மூலமாகத் தரவுத்தளப் பின்னணியில் (Backend) கண்டறியப்பட்டு, அதைத் தொடர்ந்து, ஊராட்சி அளவில் நடத்தப்படும் இலக்கு குழு விவாதங்கள் (Focus Group Discussion) மூலமாகவும் உறுதி செய்யப்படுகின்றன. அந்த இறுதிப் பட்டியலுக்கு கிராம சபை ஒப்புதல் அளிக்கிறது.

### 2.3.5. திட்டங்களின் ஒருங்கிணைப்புக்காக சமுதாய அடிப்படையிலான அமைப்புகளை பயன்படுத்துதல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு பல்வேறு சேவைகளை விரிவுபடுத்துவதற்காக பிற அரசுத் துறைகள் மற்றும் தேசிய அளவில் செயல்படுத்தப்படும் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகின்றன.

**i. சமூக உள்ளாக்கம் மற்றும் நலிந்த பிரிவினர்**

- **சிறப்புப் பிரிவு சுய உதவிக் குழுக்கள்:** மாற்றுத்திறனாளிகள், முதியோர், திருநங்கைகள் மற்றும் மிகவும் நலிவுற்ற பழங்குடியினர்கள் ஆகியோர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் சிறப்பு சுய உதவிக் குழுக்கள்

அமைக்கப்படுகிறது. இந்த சிறப்பு சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15,000/- சுழல் நிதியாகவும், ஓராண்டை கடந்த குழுக்களுக்கு பொருளாதார செயல்பாட்டிற்காக ரூ.1 இலட்சம் கடனுதவியாக வழங்கப்படுகிறது. **2026-27 ஆம் ஆண்டில் 5, 000 சிறப்பு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.**

- **அரையாண்டு தேவை மதிப்பீட்டு முகாம்கள்:** நலத்திட்ட உதவிகள் வழங்குவதை ஒழுங்குபடுத்துவதற்காக 2025-26 ஆம் ஆண்டில் அனைத்து (388) வட்டாரங்களிலும் (37 மாவட்டங்கள்) (ரூ. 38.80 இலட்சம் ஒதுக்கீடு) நடத்தப்பட்டது. **2026-27 ஆம் ஆண்டில், அனைத்து வட்டாரங்களிலும் ரூ. 39.70 இலட்சம் மதிப்பீட்டில் அரையாண்டு தேவை மதிப்பீட்டு முகாம்கள் நடத்தப்படும்.**

- **அறிவாற்றல் நடத்தை சிகிச்சை** (Cognitive Behavioural Therapy): முதியோர்களுக்கான அறிவாற்றல் நடத்தை சிகிச்சை செயல்பாடுகள், திருச்சி மாவட்டத்தின் இரண்டு முன்னோடி வட்டாரங்களின் செயல்பாடுகள், மூன்று மாவட்டங்களில் 11 வட்டாரங்களுக்கு (358 கிராம ஊராட்சிகள்) விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

**ii. உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் (Food, Nutrition, Health and WASH)**

- **அடித்தட்டு அளவிலான திறன் மற்றும் பிரச்சாரங்கள்**: 3.31 இலட்சம் சுய உதவிக் குழு ஊக்குநர்கள்/பிரதிநிதிகளுக்குப் (ரூ.2.32 கோடி ஒதுக்கீட்டில்) பயிற்சி அளிக்கப்பட்டது.
- **ஊட்டச்சத்து நிறுவனங்கள்**: 2025–26 ஆம் நிதியாண்டில் (அலகு ஒன்றுக்கு ரூ. 1 இலட்சம் மதிப்பீட்டில்) 388 நுண்

தொழில் நிறுவனங்கள் (Micro–enterprise units) நிறுவப்பட்டுள்ளன. **இதனைத் தொடர்ந்து, 2026–27 ஆம் நிதியாண்டில், ரூ.3.97 கோடி நிதி ஒதுக்கீட்டில் 397 ஊட்டச்சத்து நிறுவனங்கள் (Nutri enterprises) புதிதாக நிறுவப்பட உள்ளன.**

- **மக்களைத் தேடி மருத்துவம்**: தொற்றா நோய்க் (Non Communicable Diseases) கண்டறிதல், கண்காணிப்பு மற்றும் வீடு தேடி மருந்து வழங்கும் பணிகளுக்காக 10,969 சுய உதவிக் குழு பெண் சுகாதாரத் தன்னார்வலர்கள் (Women Health Volunteers) ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 8,713 பேர் ஊரகப் பகுதி ஆரம்ப சுகாதாரத் துணைக் மையங்களிலும், 2,256 பேர் 649 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் பணியாற்றி வருகின்றனர்.

- **மனநலத் திட்டம் (Mental Health Programme):** இத்திட்டம் இதுவரை 13,280 பள்ளிகள் மற்றும் 2,080 கல்லூரிகளைச் சென்றடைந்துள்ளது. **2026–27 ஆம் நிதியாண்டில், போதைப்பொருள் மற்றும் மதுப்பழக்கத்திற்கு எதிரான தீவிர விழிப்புணர்வு உள்ளிட்ட மனநல அமர்வுகள் 10,000 பள்ளிகள் மற்றும் 1,000 கல்லூரிகளில் நடத்தப்பட உள்ளன.**

**iii. பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம்**

- பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் கீழ், 32,995 ஊரக மற்றும் பேரூராட்சி தொடக்கப் பள்ளிகளில் 15,02,382 குழந்தைகளுக்கு காலை உணவு வழங்குவதற்காக 57,061 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் "பள்ளி சமையல் பொறுப்பாளர்களாக"

ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் (இவர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக 2025–26 ஆம் நிதியாண்டில் ரூ.59.05 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது). **2026–27 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு அரசு, இக்காலை உணவுத் திட்டத்தை 12,812 நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் (வகுப்புகள் 6–8) மாணவர்களுக்கும் விரிவுபடுத்தி, மேலும் 10,85,121 குழந்தைகளுக்கு நாள்தோறும் காலை ஊட்டச்சத்து உணவு வழங்கப்படவுள்ளது.**

**iv. பாலின விழிப்புணர்வு மற்றும் உரிமைகள் ஒருங்கிணைப்பு**

- அனைத்து சுய உதவிக் குழுக்களிலும் 'நம் தோழியர்' (Gender Point Persons) பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஆதரவாக ஓரிடச் சேவை மையங்களுடன் (One Stop Centres) இணைந்து 37

மாவட்டங்களில் 388 பாலின வள மையங்கள் (Gender Resource Centres – GRCs) செயல்படுத்தப்பட்டு வருகின்றன..

- ஜூன் 30, 2026 நிலவரப்படி, பதிவு செய்யப்பட்ட 12,998 வழக்குகளில் 12,462 வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன (தீர்வு விகிதம்–95.9%). **2026–27 ஆம் ஆண்டில், புதிதாக உருவாக்கப்பட்ட வட்டாரங்களில் 9 புதிய பாலின வள மையங்கள் (GRC) நிறுவப்படும்.**
- **மாதவிடாய் சுகாதார மேலாண்மை (Menstural Health Management)**: இதுவரை 10,000 பள்ளிகள் மற்றும் 1,602 கல்லூரிகளைச் சென்றடைந்துள்ளது. 2026–27 ஆம் ஆண்டில், 10,000 பள்ளிகள் மற்றும் 1,000 கல்லூரிகளில் விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்படும்.

**v. உள்ளூர் நிர்வாகம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் (PRI) ஒருங்கிணைப்பு**

- அனைத்து (12,524) கிராம ஊராட்சிகளிலும் கிராம ஊராட்சி மேம்பாட்டுத் திட்டங்களுடன் (GPDP) கிராம செழிப்பு மற்றும் மீட்சித் திட்டங்கள் (VPRP) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
- இதுவரை 1,963 கிராம ஊராட்சிகளில் (75 வட்டாரங்கள், 6 மாவட்டங்கள்) ஊராட்சி அமைப்புகள் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புகளின் ஒருங்கிணைப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2026-27 ஆம் ஆண்டில், ஊராட்சி அமைப்புகள் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புகளின் ஒருங்கிணைப்பு (PRI-CBO Convergence) 15 மாவட்டங்களில் உள்ள 159**

**வட்டாரங்களைச் சேர்ந்த 5,913 கிராம ஊராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.**

- **2026-27 ஆம் ஆண்டில், மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவின் மேற்பார்வையில், அரசாணை (நிலை) எண். 235, ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித் துறை, நாள்: 15.10.2025-ன் படி, கிராம ஊராட்சி – சுய உதவிக் குழு கூட்டாண்மை 370 முன்னோடி கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.**

**2.4. 2026-27 ஆம் ஆண்டிற்கான முக்கிய இலக்குகள்**

| **செயல்திறன் குறியீடு** | **2026-27 இலக்கு** |
|---|---|
| சுழல் நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதி | ரூ.122.00 கோடி |
| ஆண்டு வங்கி கடன் | ரூ.38,000 கோடி |
| சுய உதவிக் குழு மகளிர் நடத்தும் தொழில் நிறுவனங்களுக்கு உதவி | 15,000 |

# 3. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)

**3.1 பின்னணி**

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் வறுமையை ஒழிப்பதற்காக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் கடந்த 2016–ஆம் ஆண்டு முதல் 'தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்' செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதாச்சார அடிப்படையில் நிதி வழங்கப்படுகிறது.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், சுய உதவிக் குழுக்கள், பகுதி மற்றும் நகர அளவிலான கூட்டமைப்புகள் போன்ற சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்குவதன் மூலம், நகர்ப்புர குடும்பங்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான சமூக–பொருளாதாரச் சவால்களை எதிர்கொள்வதற்கான ஒரு கட்டமைப்பை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

வழங்குகிறது. இத்திட்டம் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் நிதிச் சேவைகளைச் சென்றடையச் செய்தல், நிலையான வாழ்வாதாரம், சந்தை இணைப்புகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்கிறது.

மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும் நிர்வாகக் கட்டமைப்பு, ஓர் ஒருங்கிணைந்த அமைப்பின் மூலம் செயல்படுகிறது:

1. **மாநிலத் திட்ட மேலாண்மை அலகு (SMMU):** தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தலைமையின்கீழ் செயல்படுகிறது. இது மாநிலக் கொள்கை உருவாக்கம், நிதி ஒதுக்கீடு, துறைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் ஒட்டுமொத்த

செயல்பாட்டுக் கண்காணிப்பு ஆகியவற்றை மேற்கொள்கிறது.

2. **மாவட்டத் திட்ட மேலாண்மை அலகு (DMMUs)**: சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுகிறது. இவ்வமைப்பானது இணை இயக்குநர்கள் / திட்ட இயக்குநர்களின் தலைமையின் கீழ் உதவி திட்ட அலுவலர்களைக் கொண்டு செயல்படுகிறது. இது கள செயல்பாடுகள், வங்கி கடன் இணைப்பு, மாவட்ட வளத் திட்டமிடல் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

3. **நகரத் திட்ட மேலாண்மை அலகு (CMMUs)** : நேரடி கள அளவிலான உதவிகளை வழங்குதல், சமுதாயம் சார்ந்த அமைப்புகளை வலுப்படுத்துதல்

மற்றும் திட்ட மேலாண்மை ஆகிய பணிகளை மேற்கொள்கிறது. அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் (மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள்) சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் பணியமர்த்தப்பட்டு, திட்ட மேலாண்மைப் பணிகளை மேற்கொள்கிறது.

4. **சமுதாயம் சார்ந்த அமைப்புகள் (CBOs) :** சுய–நிர்வாகம் கொண்ட நிறுவனக் கட்டமைப்பின் மையப்பகுதியாகத் திகழ்கின்றன. இந்த அமைப்பில்:

அ) சுய உதவிக் குழுக்கள்: 10 முதல் 20 மகளிரை உறுப்பினராகக் கொண்ட குழுக்கள்.

ஆ) பகுதி அளவிலான கூட்டமைப்புகள் (ALFs): அனைத்து சுய உதவிக்

குழுக்களையும் பகுதி அளவில் ஒருங்கிணைத்து பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக செயல்படுகின்றன.

இ) நகர அளவிலான கூட்டமைப்புகள் (CLFs): நகர அளவில் சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட கூட்டமைப்புகளாக செயல்பட்டு, மேம்பட்ட நிதி மற்றும் தொழில் முனைவோர் சார்ந்த சேவைகளை வழங்குகின்றன.

## 3.2. 2026–27 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் உத்திகள் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள்

### 3.2.1 சுய உதவிக் குழுக்களை இணைத்தல் மற்றும் சமுதாய அமைப்புகளின் நீடித்த – நிலைத்த தன்மையை அவற்றின் சொந்த வருவாய் மூலம் உறுதி செய்தல்

- நகர்ப்புர சுய உதவிக் குழுக்களை 'பகுதி அளவிலான கூட்டமைப்புகளில்' 100% இணைப்பதை அடைதல். [நிலையான வளர்ச்சி இலக்குகள் *[SDG 1.3, 1.4 & 5.a]*
- சமுதாயம் சார்ந்த அமைப்புகளை **சொந்த வருவாய் ஈட்டும் மாதிரியாக** உருவாக்குதல். *[SDG இலக்குகள் 1.4, 5.a & 8.3]*

### 3.2.2 நிதி உள்ளாக்கம் மற்றும் கடன் பெறுவதை வலுப்படுத்துதல்

- **1.45 இலட்சம் நகர்ப்புர சுய உதவிக் குழுக்களுக்கு** வங்கிக் கடன் இணைப்புகளை ஏற்படுத்துதல். *[SDG இலக்குகள் 1.4, 5.a & 8.10]*
- அனைத்து சமுதாயத் சார்ந்த அமைப்புகளுக்கும் நிதிசார் விழிப்புணர்வு மற்றும் மின்னணு வங்கிச் சேவை நடைமுறையை விரிவுபடுத்துதல். *[SDG இலக்குகள் 5.b & 8.10]*

### 3.2.3 வாழ்வாதாரம், திறன் மற்றும் குடும்ப வருமானத்தை மேம்படுத்துதல்

- நகர்ப்புர ஏழை சுய உதவிக் குழு குடும்பங்களில் 75% குடும்பங்கள், குறைந்தபட்ச ஆண்டு நிகர வருமானமாக ரூ.1 இலட்சத்திற்கு மேல் ஈட்டுவதை

உறுதி செய்தல். *[SDG இலக்குகள் 1.1, 1.2 & 8.5]*

- மாநிலத்தில் உள்ள நகர்ப்புர வாழ்வாதார மையங்களின் கீழ், மகளிர் தலைமையிலான 25,000 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (MSME) முறைப்படுத்தப்பட்டு உதவிகள் வழங்கப்படுவதை உறுதி செய்தல். *[SDG இலக்கு 8.3]*

## 3.3. திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள்

### 3.3.1. நிறுவனக் கட்டமைப்பு

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், ஏழைக் குடும்பங்கள் அனைவரையும் சுய உதவிக் குழுக்களில் முழுமையாக இணைப்பதற்கு முன்னுரிமை அளிக்கிறது. நகர்ப்புரங்களில் வறுமையை ஒழிக்க, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் பட்டியல் பயன்படுத்தப்படுகிறது.

நகர்ப்புரப் பகுதிகளில் நெடுங்காலமாக விடுபட்ட மக்களை ஒருங்கிணைக்க சிறப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மூலம் கவனம் செலுத்தப்படுகிறது.

சிறப்பு சுய உதவிக் குழுக்கள் / ஒத்த நலன் குழுக்கள்: சாலையோர வியாபாரிகள், நலிவுற்ற தொழில்சார் குழுக்கள், மாற்றுத்திறனாளிகள், முதியோர், திருநங்கைகள் மற்றும் மிகவும் நலிவுற்ற பழங்குடியினர் (PVTGs), ஆகியோர்களின் தேவைகளுக்கு ஏற்ப சிறப்பு சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல்.

| அமைப்புகள் | அமைப்பு முறை | அடைந்த முன்னேற்றம் |
|---|---|---|
| **நகர்ப்புர சுய உதவிக் குழு** | மகளிர் சுய உதவிக் குழு – நகர்ப்புரத்தைச் சார்ந்த 10–20 மகளிர் இணைந்து அமைக்கப்படும் குழு.<br>சிறப்பு சுய உதவிக் குழு – குறைந்தபட்சம் 5 | 1.72 இலட்சம் நகர்ப்புர சுய உதவிக் குழுக்கள் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் செயல்பட்டு வருகின்றன. |

| | | |
|---|---|---|
| | உறுப்பினர்கள் இணைந்து அமைக்கப்படும் குழு. ஐந்து முக்கிய கோட்பாடுகளை பின்பற்றி செயல்படும். | |
| **பகுதி அளவிலான கூட்டமைப்பு** | குறைந்தபட்சம் 10 நகர்ப்புர சுய உதவிக் குழுக்களை கொண்டு அமைக்கப்படும். தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975–ன் கீழ் பதிவு செய்யப்படுகிறது. | 4,912 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் செயல்பட்டு வருகின்றன. |
| **நகர அளவிலான கூட்டமைப்பு** | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு அளவில் பகுதி அளவிலான கூட்டமைப்புகளை கொண்டு அமைக்கப்படும். தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975–ன் கீழ் பதிவு செய்யப்படுகிறது. | 92 நகர அளவிலான கூட்டமைப்புகள் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் செயல்பட்டு வருகின்றன. |

### 3.3.2. திறன் மேம்பாடு

நகர்ப்புர வாழ்வாதார மையங்களில் அனைத்து திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் 'சமுதாய வள பயிற்றுநர்கள்' மூலமாகவே வழங்கப்படுகின்றன.

- **பயிற்சியாளர்களாக சமுதாய வள பயிற்றுநர்கள்**: சமூக மூலதனமாகத் திகழும் சமுதாய வள பயிற்றுநர்கள், பயிற்சி உபகரணங்களைப் பயன்படுத்தி சுய உதவிக் குழுக்களுக்கு தொடர்ந்து திறன் மேம்பாட்டு பயிற்சிகளை மேற்கொள்கின்றனர்.
- **பயிற்சி தொகுப்புகள்**: சுய உதவிக் குழு உறுப்பினர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பிரதிநிதிகள், பகுதி அளவிலான கூட்டமைப்புகள், நகர அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும்

செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை குறித்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

### 3.3.3. நிதி உள்ளாக்கம் மற்றும் கடன் வழங்கும் முறை

நிதி உள்ளாக்கம் என்பது நகர்ப்புர ஏழை மக்களுக்கு, அவர்களின் தேவைகளுக்கு ஏற்ற, நம்பகத்தன்மை வாய்ந்த நிதிச் சேவைகள் எளிதில் கிடைக்கவும், அவற்றைப் பயன்படுத்தும் வாய்ப்பு உறுதிசெய்யப்படவும் வழிவகுக்கும் ஒரு முக்கியமான செயல்முறையாகும். சுய உதவிக் குழு உறுப்பினர்கள் சேமிப்புக் கணக்குகளைத் தொடங்கவும், நிறுவன ரீதியான கடன்களைப் பெறவும், காப்பீடு மற்றும் ஓய்வூதியத் திட்டங்களில் இணைவதை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் விரிவுபடுத்துகிறது. அதேவேளையில், சமூகத்தால் நிர்வகிக்கப்படும் நிலையிலிருந்து,

முறையான வங்கி அமைப்புடன் முழுமையாக இணையும் நிலையை நோக்கி, அவர்கள் படிப்படியாக உயர்வதற்கு இது உதவுகிறது. சுய உதவிக் குழுக்களை சிறு சேமிப்பு நிலையிலிருந்து முறையான நிறுவன வங்கி கடன் பெறும் நிலைக்கு மாற்றுவதற்காகப் பின்வரும் உத்திகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

### 3.3.4. நகர்ப்புரங்களில் சமுதாயம் நிதி சார்ந்த உதவிகள்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் 'பகுதி அளவிலான கூட்டமைப்புகள்' மூலம் பல்வேறு நிலைகளில் வகைப்படுத்தப்பட்ட சமூக நிதிகளை வழுங்குகிறது. பயிற்சி பெற்ற, தகுதிவாய்ந்த மற்றும் தரமதிப்பிடு செய்யப்பட்ட சுயஉதவிக் குழுக்களுக்கு உள்–கடன் வழங்கவும் மூலதன நிதியை உருவாக்கவும், உறுப்பினர்களை அதிக அளவிலான வங்கிக் கடன்களைப் பெறத் தயார்படுத்தவும், மூன்று மாத

காலத்திற்குப் பிறகு ஒரு குழுவிற்கு ரூ.10,000/- வீதம் 'சுழல் நிதி' வழங்கப்படுகிறது. இதுவரை ரூ.118.96 கோடி மதிப்பிலான சுழல் நிதியை 1.19 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் பெற்றுள்ளன.

### 3.3.5. நகர்ப்புரங்களில் முறைசார் வங்கிக் கடன் அணுகல்

சுய உதவிக் குழுக்களுக்கான வங்கி இணைப்புத் திட்டம் மகளிரை முறையான வங்கிச் சேவையுடன் இணைக்கிறது. பிணையில்லா கடன்களை குறைந்த வட்டி விகிதத்தில் பெறும் வாய்ப்பைப் பெறுவதுடன், அதிக வட்டி வசூலிக்கும் முறைசாரா நிதி நிறுவனங்களின் பிடியிலிருந்தும் பாதுகாக்கப்படுகின்றனர். **சுழல்நிதி** போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்ட போதிலும், சுய உதவிக் குழுக்கள் தங்களது தகுதிக்கேற்ப பல்வேறு அளவுகளில் தவணைக்கால கடனாகவோ அல்லது ரொக்க

கடனாகவோ வங்கிகளிலிருந்து பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களின் பணம் எடுக்கும் திறன், ஆண்டுதோறும் மறு ஆய்வு செய்யப்பட்டு, மூன்று ஆண்டுகளுக்கு குறைந்தபட்ச ரொக்க கடன் வரம்பாக ரூ.6 இலட்சம், வங்கிகளால் நிர்ணயிக்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் ரூ.10 லட்சத்திற்கு மேல், ரூ.20 இலட்சம் வரையிலான கடன்களுக்கு, குறு தொழில்களுக்கான கடன் உத்தரவாத நிதித் திட்டம் (Credit Guarantee Fund for Micro Units) பொருந்தும். இத்திட்டத்தின் கீழ், கடன் திருப்பிச் செலுத்துவதில் தவறு ஏற்பட்டால், வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பில் 75% வரை ஈடுசெய்யப்படும். பகுதி அளவிலான கூட்டமைப்புகள் நிதி இடைத்தரகர்களாகச் செயல்பட ஊக்குவிக்கப்படுகின்றன; இவற்றுக்கு வங்கிகள் பெருங்கடன்களை வழங்குகின்றன, பின்னர்

இக்கூட்டமைப்புகள் அத்தொகையைச் சுய உதவிக் குழுக்களுக்குக் கடனாக வழங்குகின்றன.

### 3.3.6. நகர்ப்புரங்களில் நிதி உள்ளாக்கம்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், நகர்ப்புர சுய உதவிக் குழு–வங்கி இணைப்புத் திட்டத்தின் கீழ் தவணைக்கால கடன் மற்றும் ரொக்கக் கடன் வசதிகளைப் பெற வழிவகுப்பதன் மூலம் நகர்ப்புர சுய உதவிக் குழுக்களின் நிதி உள்ளாக்கத்தை ஊக்குவிக்கிறது.

பிரதம மந்திரி முத்ரா யோஜனா (PMMY) திட்டத்துடனான ஒருங்கிணைப்பின் கீழ், 2026–27 ஆம் ஆண்டில் ரூ.105.01 கோடி மதிப்பிலான 3,500 முத்ரா கடன்களை வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளது. தொழில்முனைவோரை ஊக்குவித்தல், நுண்–தொழில்களுக்கு ஆதரவளித்தல் மற்றும் நகர்ப்புரப்

பயனாளிகளிடையே நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துதல் ஆகியவை இதன் நோக்கங்களாகும்.

நகர்ப்புரங்களில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 11.64 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் (PMJJBY) கீழும், 12.34 இலட்சம் உறுப்பினர்கள் விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் (PMSBY) கீழும் கொண்டு வரப்பட்டுள்ளனர். இதன் மூலம் நகர்ப்புர ஏழைப் பெண்களுக்கு நிதிப் பாதுகாப்பும் உத்தரவாதமும் உறுதி செய்யப்படுகிறது.

### 3.3.7. நிதிசார் அறிவு

நகர்ப்புர வங்கிக் கிளைகள் மூலம் நடத்தப்படும் முகாம்கள் வாயிலாக நிதிசார் அறிவுத் திறன் மேம்படுத்தப்படுகிறது. திட்டமிடல், சேமிப்பு, கடன், காப்பீடு, ஓய்வூதியம் மற்றும் மின்னணு நிதிச் சேவைகள் குறித்த உள்ளூர்

மொழிப் பயிற்சித் தொகுப்புகளைக் கொண்டு சமுதாய வள பயிற்றுநர்களால் பயிற்சியளிக்கப்படுகிறது.

பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா, பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் அடல் ஓய்வூதியத் திட்டம் ஆகிய காப்பீடு மற்றும் ஓய்வூதியப் பாதுகாப்பு அம்சங்களும் இப்பயிற்சித் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

### 3.4. வாழ்வாதார உருவாக்கம் மற்றும் தொழில் குழுமங்களை முறைப்படுத்துதல்

சுய உதவிக் குழு குடும்பங்கள் ஆண்டு முழுவதும் வருமானம் ஈட்டும் வகையில் தொழில் நிறுவனங்களின் வருமான ஆதாரங்களை விரிவுபடுத்துகிறது. மகளிர் தலைமையிலான உள்ளூர் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை

உறுதி செய்வதற்காக, நிலையான தொழில் நிறுவனங்களை முறைப்படுத்துதல், பின்னோக்கு மற்றும் முன்னோக்கு இணைப்புகள் மற்றும் மதிப்பு இணைப்பின் அடிப்படையிலான ஒருங்கிணைந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலை ஊக்குவித்து வருகிறது.

வணிகத் திட்டமிடல் மற்றும் நிதி வசதி குறித்த வழிகாட்டுதல் மூலம் உயர்நிலைத் தொழில் நிறுவனங்களை முறைப்படுத்தவும் மற்றும் விரிவுபடுத்தவும் உதவிடும் வகையில் ஓரிட நிறுத்த வசதி, நகர வாழ்வாதார மையங்களால் வழங்கப்படுகிறது.

பிரதமரின் குறு உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ், 7,317 தொழில் நிறுவனங்கள் தொடக்க மூலதனம் மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டப் பயிற்சி மூலம் பயனடைந்தன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 81 நகர்ப்புர வாழ்வாதார மையங்கள் மூலம், குழாய் பழுதுபார்ப்பவர்கள், மின்சாரப் பணியாளர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் போன்ற நகர்ப்புர முறைசாரா தொழிலாளர்களை, சேவைத் தளங்களைப் பயன்படுத்தி, குடியிருப்பு மற்றும் வணிகத் தேவைகளுடன் இணைக்கிறது.

## 3.5. திட்டங்களை ஒருங்கிணைப்பதில் சமுதாய அமைப்புகளின் பங்களிப்பு

சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு பல்வேறு சேவைகளை வழங்குவதற்காக அரசுத் துறைகள் மற்றும் தேசிய இயக்கங்களுடன் நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

### 3.5.1. திறன் பயிற்சிக்கான ஒருங்கிணைப்பு

நகர்ப்புர ஏழைப் பிரிவைச் சேர்ந்த 5,000 இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளிப்பதற்காக, 2026–27 ஆம் ஆண்டில் RSETI, TNSDC, ICT அகாடமி மற்றும் பிற அரசுத் திறன் பயிற்சித் திட்டங்களுடன் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் இணைந்து செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது, இதற்கான ஏற்பாடுகளைச் சமுதாய அமைப்புகள் மேற்கொள்ளும்.

### 3.5.2. சுகாதாரம் மற்றும் தூய்மை

மக்களைத் தேடி மருத்துவம்: தொற்றா நோய்களைக் (NCD) கண்டறிதல், கண்காணித்தல் மற்றும் நோயாளிகளின் இருப்பிடத்திற்கே சென்று மருந்துகளை வழங்குதல் ஆகிய பணிகளுக்காக, 649 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் 2,256 சுய உதவிக் குழு மகளிர் சுகாதாரத் தன்னார்வலர்கள் (WHVs) பணிபுரிவதற்கு

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் வழிவகை செய்துள்ளது.

### 3.5.3. பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு உட்பட்ட தொடக்கப் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தில், 2,651 சுய உதவிக் குழு உறுப்பினர்களைப் "பள்ளி சமையலறைப் பொறுப்பாளர்களாக" ஈடுபடுத்துவதற்கு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் வழிவகை செய்துள்ளது.

## 3.6. 2026-27 ஆம் ஆண்டுக்கான முக்கிய இலக்குகள்

| செயல்திறன் குறியீடு | ஒட்டுமொத்த முன்னேற்றம் | 2026-27 ஒட்டுமொத்த இலக்கு |
|---|---|---|
| பகுதி அளவிலான கூட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்கள் | 95,882 | 1,39,886 |
| நகர அளவிலான கூட்டமைப்பு | 86 | 140 |
| நகர்ப்புர தொழில் நிறுவனங்களை முறைப்படுத்துதல் | 14,000 | 25,000 |

# 4. தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP)

## 4.1 பின்னணி

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (Tamil Nadu Rural Transformation Project – TNRTP) என்பது உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்ட முன்னோடித் திட்டமாகும். இத்திட்டம், ஊரக வறுமை ஒழிப்பிற்கான அரசின் அணுகுமுறையை, சமூகம் சார்ந்த வளர்ச்சி நிலையிலிருந்து தொழில் முனைவோர் தலைமையிலான பொருளாதார மாற்றத்தை நோக்கிய அடுத்தகட்ட வளர்ச்சிக்கு முன்னெடுத்துச் சென்றுள்ளது.

TNRTP திட்டம் 2017ஆம் ஆண்டு முதல் 30.06.2025 வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.919.73 கோடி ஆகும். இதில் உலக வங்கியின் பங்களிப்பு 70 சதவீதமும், தமிழ்நாடு அரசின் பங்களிப்பு 30 சதவீதமும் ஆகும். இத்திட்டம் மாநிலத்தின் 31

மாவட்டங்களில் உள்ள 120 வட்டாரங்களின் 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டது. தொழில் முனைவோரை உருவாக்குதல், நிதி வசதிகளுக்கான அணுகலை மேம்படுத்துதல், திறன் மேம்பாட்டை ஊக்குவித்தல், வேளாண்மை மற்றும் வேளாண்மை சாராத மதிப்புச் சங்கிலிகளை உருவாக்குதல் மற்றும் ஊரகத் தொழில் நிறுவனங்களை போட்டித்திறன் மிக்க சந்தைகளுடன் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றின் மூலம் ஊரக வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவதில் இத்திட்டம் முக்கியப் பங்காற்றியது. திட்டம் செயல்படுத்தப்பட்ட காலத்தில் 5.35 இலட்சம் ஊரக மக்கள் பயனடைந்துள்ளனர். குறிப்பாக, பெண்களின் பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிப்பதில் இத்திட்டம் சிறப்பு கவனம் செலுத்தியது.

### 4.2 தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் – (TNRTP 2.0)

தமிழ்நாடு அரசு, TNRTP – இரண்டாம் கட்டத்தை, ஊரகப் பொருளாதார மாற்றத்திற்கான அடுத்த தலைமுறைத் திட்டமாக முன்மொழிந்துள்ளது. முதற்கட்டத்தில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட தொழில் நிறுவனங்களை மையமாகக் கொண்ட வளர்ச்சி அணுகுமுறையை, மாநிலத்தின் 37 மாவட்டங்களில் உள்ள 388 ஊரக வட்டாரங்களுக்கும் விரிவுபடுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்கான மதிப்பிடப்பட்ட மொத்தத் திட்ட மதிப்பு ரூ.1,000 கோடி ஆகும்

இத்திட்டம் தொழில் நிறுவனங்களை வலுப்படுத்தும் வகையில், பல்வேறு செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் (TNCDW) கட்டமைப்புடன்

ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வேளாண்மை மற்றும் வேளாண்மை சாராத உற்பத்தியாளர் கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், தொழில் நிறுவனங்களை உருவாக்குதல் மற்றும் முறைப்படுத்துதல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேலும், ஏற்கனவே உள்ள நிறுவனக் கட்டமைப்புகளைப் படுத்துவதன் மூலம், பல்வேறு திட்டங்களின் ஒருங்கிணைப்பு, செயல்பாடுகளின் விரிவாக்கம் மற்றும் நீடித்த நிலைத்தன்மை உறுதி செய்யப்படும். பெண் தொழில் முனைவோர்களின் வாழ்வாதாரம் மேலோங்கி வருமானம் ஈட்டும் தொழில் முனைவோர் நிலைக்கு முன்னேற தொடர்ந்து வலுப்படுத்தப்படும். மேலும், இத்தொழில் நிறுவனங்களை, தமிழ் நாடு ஊரக தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்க மையத்தில்

(TN-RISE) இணைப்பதன் வாயிலாக பெண்கள் தலைமையிலான தொடக்கத் தொழில்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி விரைவுபடுத்தப்படும்.

மாநிலத்தின் 388 ஊரக வட்டாரங்களிலும் தொழில் முனைவோர் மேம்பாடு, தொழில் குழும வளர்ச்சி, சந்தைப்படுத்தல், வர்த்தகப் பெயராக்கம், விநியோகச் சங்கிலி மேலாண்மை மற்றும் திட்டச் செயல்பாடுகளை வலுப்படுத்தும் வகையில், மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவிலான ஒருங்கிணைந்த திட்ட மேலாண்மை அலகுகள் மூலம் நிறுவனத் திறன் மேம்படுத்தப்படும்.

### 4.3. 2026-27 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் உத்திகள் மற்றும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள்

**சிங்கப்பெண்கள் வலிமைப்படுத்தும் திட்டதின்** கீழ் முதலீட்டு மானியத்தை

செயல்படுத்துதல் மூலம் உற்பத்தி சார்ந்த முதலீடுகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவித்து, பெண்களால் செயல்படுத்தப்படும் தகுதியான தொழில் நிறுவனங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களாக (MSMEs) உயர்த்திட வழிவகைச் செய்யப்படும். *(SDGs: 1.4, 5.a, 8.3)*

- அதிக வளர்ச்சித் திறன் கொண்ட 150 மகளிர் சுயஉதவிக் குழுத் தொழில் நிறுவனங்களை தேர்வுசெய்து அவற்றின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக TN–RISE மூலம் தொழில் வழிகாட்டுதல், ஆலோசனை மற்றும் புத்தாக்க ஆதரவு வழங்குதல். *(SDGs: 8.2, 8.3, 9.5)*
- மதி சிறகுகள் தொழில் மையங்களை (MSTMs) விரிவுபடுத்துதல், 5 மண்டல வளர்ச்சி மையங்களை (RGHs) நிறுவுதல் மற்றும் உற்பத்தியாளர் தொழில் நிறுவன

அமைப்புகளை (PENs) உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் தொழில் நிறுவனங்களுக்கான ஆதரவு கட்டமைப்பை வலுப்படுத்துதல். *(SDGs: 8.3, 9.1, 9.3)*

- கட்டமைக்கப்பட்ட பயிற்சிகள், தொழில்நுட்ப திறன்கள் மற்றும் தொழில் மேலாண்மை ஆதரவின் மூலம் தொழில் முனைவோர் திறனை மேம்படுத்துதல். *(SDGs: 4.4, 5.5, 8.3)*
- பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகள் (PLFs) மூலம் பொதுத்துறை வங்கிகளுடன் இணைந்து, FLDG அடிப்படையிலான இழப்பு பகிர்வு முறையை செயல்படுத்தி, பிணையில்லாக் கடன் பெறுவதற்கான வாய்ப்பை மேம்படுத்துதல். *(SDGs: 8.3, 8.10, 17.17)*

## 4.4. திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் முக்கிய செயல்பாடுகள்

### 4.4.1. சிங்கப்பெண்கள் வலிமைப்படுத்தும் திட்டம்

பெண்கள் தலைமையிலான தகுதியுடைய மகளிர் சுய உதவிக் குழுத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.5 இலட்சம் வரை முதலீட்டு மானியம் வழங்கப்படும். மூலதன முதலீடு மற்றும் செயல்பாட்டு செலவினங்களுக்கான ஒருங்கிணைந்த முதலீடுகளுக்கு இம்மானியம் பயன்படுத்தப்படும். தொழில்நுட்ப மேம்பாடு, உட்கட்டமைப்பு உருவாக்கம், மதிப்புக்கூட்டல், வர்த்தகப் பெயராக்கம், தரச் சான்றிதழ் பெறுதல் மற்றும் சந்தை விரிவாக்கம் போன்ற நடவடிக்கைகளுக்கு இது ஆதரவளிக்கும். இதன் மூலம், தொழில் நிறுவனங்கள் நிலைத்தன்மை கொண்ட, போட்டித்திறன் மிக்க குறு, சிறு மற்றும்

நடுத்தரத் தொழில் (MSMEs) நிறுவனங்களாக உருவாக்கப்படும்.

### 4.4.2 TN-RISE மூலம் மகளிர் சுயஉதவிக் குழுத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி விரைவாக்கம்

தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்க மையம் (TN-RISE), மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் நிறுவனங்களால் உருவாக்கப்படும் அதிக வளர்ச்சித் திறன் கொண்ட தொழில் நிறுவனங்களை அடையாளம் கண்டு, வளர்த்து, விரிவுபடுத்துவதற்கான மாநிலத்தின் முக்கிய தொழில் வளர்ச்சி தளமாகச் செயல்படும். வளர்ச்சிக்கான தெளிவான சாத்தியக்கூறுகளைக் கொண்ட 150 உயர்திறன் வாய்ந்த மகளிர் சுய உதவிக் குழுத் தொழில் நிறுவனங்கள், கட்டமைக்கப்பட்ட தேர்வு முறையின் மூலம்

அடையாளம் காணப்பட்டு, தொழில் வளர்ச்சி விரைவாக்கத் திட்டத்தில் இணைக்கப்படும். இந்த முன்னெடுப்பின் மூலம், விரிவாக்கத்திற்கான திறன் கொண்ட பெண்கள் தலைமையிலான தொழில் நிறுவனங்களின் தொடர்ச்சியான வளர்ச்சிப் பாதை உருவாக்கப்பட்டு, அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டின் ஊரகத் தொழில் நிறுவனச் சூழலியலை வலுப்படுத்துவதற்கும் பங்களிக்கும்.

### 4.4.3 மதி சிறகுகள் தொழில் மையங்கள் (MSTMs)

மதி சிறகுகள் தொழில் மையங்கள் (MSTMs), தொழில் நிறுவனங்களின் தேவையறிதல், தொழில் திட்டம் தயாரித்தல், பதிவு மற்றும் சட்டப்பூர்வ இணக்க நடவடிக்கைகளுக்கான உதவி, சந்தை இணைப்பு உள்ளிட்ட பல்வேறு தொழில் மேம்பாட்டு சேவைகளை

வழங்குகின்றன. தற்போது MSTMs, 31 மாவட்டங்களில் 42 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும், 6 மாவட்டங்களில் 15 இடங்களில் ஓரிடச் சேவை மையங்கள் (OSF Centres) செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள் ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் தொழில் தொடங்க விரும்பும் பெண்களுக்கு தொழில் வளர்ச்சி தொடர்பான கட்டமைக்கப்பட்ட சேவைகளை வழங்கி வருகின்றன.

பெண்கள் தலைமையிலான தொழில்முனைவை மேலும் வலுப்படுத்தவும், மாநிலம் முழுவதும் ஒரே தரத்திலான தொழில் மேம்பாட்டு சேவைகளை உறுதி செய்யவும், MSTMs அனைத்துத் மாவட்டத் தலைமையகங்களிலும் 100 சதவீத அளவில் விரிவுபடுத்த முன்மொழியப்படுகிறது. இவ்விரிவாக்கம் தொழில் முனைவோர் ஆதரவு சேவைகளை கடைநிலைக்குக் கொண்டு

சேர்ப்பதை வலுப்படுத்தும், அடைகாத்தல் மற்றும் வழிகாட்டுதல் அமைப்புகளின் வீச்சையும் செயல்திறனையும் மேம்படுத்தும், மேலும் வணிக மேம்பாட்டு உதவி, சந்தை இணைப்புகள் மற்றும் திறன் மேம்பாட்டு ஆதரவு ஆகியவற்றுக்கான சமமான அணுகலை உறுதி செய்யும். அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதாரப் பங்கேற்பை ஊக்குவிப்பதோடு, தமிழ்நாடு முழுவதும் பெண் தொழில் முனைவோர் சூழலமைப்பையும் வலுப்படுத்தி சிங்கபெண்களுக்கு பயனளிக்கும் வகையில் இந்த முன்னெடுப்பானது உதவுகிறது.

### 4.4.4 TN–RISE கீழ் மண்டல வளர்ச்சி மையங்கள் (RGHs)

ஊரகத் தொழில் நிறுவனங்களின் சூழலியலை வலுப்படுத்தி, அவற்றின் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கில், TN–RISE யின் கீழ் மண்டல வளர்ச்சி மையங்கள் (Regional

Growth Hubs – RGHs) நிறுவப்படும். தொழில் முனைவோர் வளர்ச்சிக்கான வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு சேவைகள் வழங்க பரவலாக்கப்படுவதற்காக சென்னையில் செயல்படும் TN–RISE மையத்தைப் போன்ற நவீன அடிப்படை வசதிகளுடன், தமிழ்நாட்டின் 5 மண்டலங்களில் RGHs நிறுவப்படும். மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு, தொழில்முறை நிபுணத்துவம், மின்னணு வசதிகள் மற்றும் துறைசார் தொழில் ஆதரவு சேவைகளுடன், RGHs தீவிரமான வழிகாட்டுதல், தனியார் துறைப் பங்கேற்பு மற்றும் தொழில்நுட்ப செயல்விளக்கங்களை வழங்கும்.

RGHs, தொழில் நிறுவனங்களின் முழு தொழில் வாழ்க்கைச் சுழற்சிக்கும் தேவையான அணைத்து சேவைகளை ஒரே இடத்தில் வழங்கும் ஓரிட சேவை மையங்களாக செயல்படும்.

**முக்கிய சேவைகள்:**

- தொழில் தொடங்க விரும்பும் வளர்ச்சித் திறன் கொண்ட நபர்களை அடையாளம் கண்டு ஒருங்கிணைத்தல்.
- தொழில் முனைவோருக்கான விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை வழங்கி தொழில் வாய்ப்புகளை அடையாளம் காணுதல்.
- UDYAM, GST, FSSAI, MSME உள்ளிட்ட சட்டப்பூர்வப் பதிவுகள் மற்றும் பிற தேவையான நடைமுறைகள் மூலம் தொழில் நிறுவனங்களை முறைப்படுத்துதல்.
- உரிமங்கள், சான்றிதழ்கள் மற்றும் சட்டப்பூர்வ/ஒழுங்குமுறை இணக்க நடவடிக்கைகளுக்கான உதவி.
- தொழில் திட்டங்கள் மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் (DPRs) தயாரித்தல்.

- வங்கிக் கடன், அரசு திட்டங்கள், மானியங்கள், தனியார் முதலீடு மற்றும் கடன் உத்தரவாத வழிமுறைகள் மூலம் நிதி பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
- தொழில் தொடக்கம் மற்றும் விரிவாக்கத்திற்கு தேவையான தொழில் வழிகாட்டுதல், ஆலோசனை மற்றும் தொடர்ச்சியாக TN-RISE மூலம் கைகொடுத்தல்.
- உற்பத்தி மேலாண்மை, நிதி மேலாண்மை, மின்னணு தொழில் நடைமுறைகள் மற்றும் தரநிலைகள் குறித்த திறன் மேம்பாடு அளித்தல்.
- தயாரிப்பு வடிவமைப்பு, வர்த்தகப் பெயராக்கம், பொதி அமைத்தல், பெயரிடல் மற்றும் தரச் சான்றிதழ் பெறுவதற்கான உதவி.

- சந்தைப் போட்டித்திறனை மேம்படுத்துவதற்காக, தயாரிப்பு வடிவமைப்பு, வர்த்தக முத்திரை, பொதியிடல், குறியிடல் மற்றும் தரச் சான்றிதழ் ஆகியவற்றை வழங்குதல்.
- தொழில்நுட்பப் பயன்பாடு, புத்தாக்கம் மற்றும் தொழில் நிறுவனங்களின் மின்னணு மாற்றத்திற்கு ஆதரவு அளித்தல்.
- வாங்குவோர்–விற்பனையாளர்கள் சந்திப்புகள், மின்னணு வணிக வசதிகள், உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை இணைப்புகளை ஏற்படுத்துதல்.
- கண்காட்சிகள், வர்த்தகச் சந்தைகள் மற்றும் தொழில் அமைப்பு நிகழ்வுகளில் பங்கேற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.

- தொடர்ச்சியான தொழில் கண்காணிப்பு, ஆலோசனை மற்றும் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும் ஆதரவு வழங்குதல்.

### 4.4.5. உற்பத்தியாளர் தொழில் நிறுவன அமைப்புகள் (PENs)

அதிக வளர்ச்சித் திறன் கொண்ட முக்கிய துறைகளை மையமாகக் கொண்டு, 5 துறைசார் உற்பத்தியாளர் தொழில் நிறுவன அமைப்புகள் (Producer Enterprise Networks – PENs) நிறுவப்படும். இவ்வமைப்புகள் உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைத்து, உற்பத்திப் பொருட்களைத் தொகுத்தல், மதிப்புக்கூட்டல், தர உறுதி, வர்த்தகப் பெயராக்கம் மற்றும் சந்தை குறித்த நுண்ணறிவு ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் விநியோகச் சங்கிலிகள் வலுப்படுத்தப்பட்டு, தரநிலைகள் ஒருமைப்படுத்தப்பட்டு, பலதரப்பட்ட

நிதி வசதிகள் வழங்குதல் மற்றும் பெரிய சந்தைகளுக்கான வழிவகைகள் ஏற்படுத்தப்படும்.

மேலும், இவ்வமைப்பு துறைசார் மதிப்புச் சங்கிலிகள் வலுப்படுத்தப்பட்டு, உற்பத்தியாளர்களும் தொழில் நிறுவனங்களும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மேம்படுத்துகிறது. இதன் மூலம் தொழில் நிறுவனங்களின் போட்டித்திறன், உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்தை அதிகரிக்க வழிவகுக்கப்படும்.

### 4.4.6. தொழில் முனைவோர் திறன் மேம்பாடு

அடையாளம் காணப்படும் அனைத்து தொழில் முனைவோருக்கும் தொழில் கருத்து உருவாக்கம், தொழில் திட்டமிடல், தொழில் நிறுவுதல், வளர்ச்சி, சந்தை விரிவாக்கம், மின்னணு தொழில்நுட்பப் பயன்பாடு, நிதி மேலாண்மை

மற்றும் நீண்டகால நிலைத்தன்மை உள்ளிட்ட விரிவான தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும். நிலைத்தன்மை கொண்ட தொழில் நிறுவனங்களைத் தொடங்கி, அவற்றை வெற்றிகரமாக நிர்வகிப்பதற்குத் தேவையான அறிவு, திறன் மற்றும் தன்னம்பிக்கையை பெண்கள் தொழில் முனைவோர் பெறுவதை இப்பயிற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 4.4.7. பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகள் (PLFs) மூலம் முதல் இழப்புத் தவறுதல் உத்தரவாதம் (FLDG) அடிப்படையிலான பகிர்வு முறையில் நிதி வசதி.

இத்திட்டம் வங்கிகளுடன் இணைந்து முதல் இழப்பு தவறுதல் உத்தரவாதம் (First Loss Default Guarantee – FLDG) அடிப்படையில் சிறப்பாகச் செயல்படும் 6 பஞ்சாயத்து அளவிலான

கூட்டமைப்புகள் (PLFs), சமூக அடிப்படையிலான நிதி வசதியளிப்பாளர்களாகத் தேர்வு செய்யப்பட்டு, இக்கூட்டமைப்புகள் பெண்கள் தொழில் முனைவோரை அடையாளம் கண்டு ஒருங்கிணைத்தல், கடன் விண்ணப்பம் மற்றும் ஆவணங்களைத் தயாரித்தல், நிதியியல் கல்வி வழங்குதல் மற்றும் கடன் பெற்ற பின்னர் தொடர்ச்சியான வழிகாட்டுதல் ஆகிய பணிகளை மேற் கொண்டு பெண்கள் தொழில் முனைவோருக்கான நிறுவன நிதி வசதியை மேம்படுத்தும் நோக்கில் முன்னோட்ட அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

FLDG முறையின் மூலம், கடனில் ஏற்படும் முதல் இழப்பின் ஒரு பகுதி ஈடுசெய்யப்படுவதால் வங்கிகளுக்கான கடன் சுமை குறைக்கப்படும். இதன் மூலம் முதல் தலைமுறை பெண்கள் தொழில் முனைவோருக்கு பிணையில்லாக் கடன் வழங்குவது ஊக்குவிக்கப்படும். மேலும்,

பங்கேற்கும் PLFs—க்கு கடன் வசதி ஏற்படுத்துதல் மற்றும் கடன் திருப்பிச் செலுத்தும் செயல்திறன் அடிப்படையிலான சேவைக் கட்டணம் வழங்கப்படும். இதன் மூலம் பொறுப்புணர்வுடன் கூடிய கடன் வசதி ஏற்படுத்தும் நடைமுறை வலுப்படுத்தப்படும்.

# 5. தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்க மையம் (TN–RISE)

### 5.1 பின்னணி

நகர்ப்புர தொழில்நுட்ப தொடக்கநிலை நிறுவனங்களில் (Startup) இந்தியாவில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக இருந்தாலும், கிராமப்புற மகளிர் தொழில்முனைவோர் பல்வேறு கட்டமைப்பு சார்ந்த சவால்களை எதிர்கொள்கின்றனர். அவற்றில் குறைந்த மூலதன முதலீடு (Seed Capital), தொழில்நுட்பம் சார்ந்த தொடக்கநிலை (Incubation) வசதிகளின் பற்றாக்குறை, தொழில்துறை தொடர்புகளுக்கான குறைந்த அணுகல் மற்றும் சந்தை வாய்ப்புகளின் பற்றாக்குறை ஆகியவை முக்கியமானவை. இந்த இடைவெளியை நீக்குவதற்காக, பிரத்தியேகமாக உலக வங்கியின் ஆதரவுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW) மற்றும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் 1.0 (TNRTP 1.0) கீழ், தமிழ்நாடு அரசு TN–RISE (Tamil Nadu Rural Incubator and Start–up Enabler) தமிழ்நாடு ஊரக

தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்க மையம் என்ற மகளிர் தொடக்கநிலை நிறுவனத்தை (Startup Council) நிறுவியது.

முறைசாரா குறுந்தொழில்களில் ஈடுபட்டுள்ள மகளிர் தொழில்முனைவோரை, வளர்ச்சி அடையக்கூடிய நிறுவனங்களாக (Scalable Corporate Enterprises) மாற்றுவதற்கு உதவுதன் மூலம், 2036 ஆம் ஆண்டுக்குள், $1.5 டிரில்லியன் பொருளாதாரத்தை உருவாக்கும் மாநிலத்தின் இலக்குடன் TN–RISE இணங்கிச் செயல்படுகிறது. மாநிலத்தின் புத்தாக்கக் கட்டமைப்பைப் பயன்படுத்தி, TN–RISE ஆனது, TNCDW–இன் கீழ் செயல்படும் ஒரு சிறப்பு தொடக்கநிலை தொழில்முனைவுக்கான ஆதரவு (Incubation) மையமாக இருந்து செயல்படுகிறது.

- **TN-RISE தலைமையகம்:** இத்திட்டமானது, மேலாண்மை இயக்குநரின் (Managing Director) தலைமையிலும், தலைமைச் செயல் அதிகாரியின் (CEO) நிர்வாக வழிகாட்டுதலிலும், திட்டத் தலைவர்கள் (Project Leads), திட்ட மேலாளர்கள் (Project Managers) மற்றும் இளம் தொழில் வல்லுநர்கள் (Young Professionals) ஆகியோரால் செயல்படுத்தப்படுகிறது. மேலும், இத்திட்டத்தை செயல்படுத்தும் குழுவிற்கு, சேவை வழங்குநர்கள், தொழில்நுட்ப ஆலோசகர்கள், துறைசார் வழிகாட்டுநர்கள் (Sectoral Mentors) மற்றும் பிற பங்குதாரர்கள் ஆதரவளிக்கின்றனர்.

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** தமிழ்நாட்டின் அனைத்து 38 மாவட்டங்களிலும் தொழில்முனைவோர் கண்டறியும் முகாம்கள் (Bootcamps)

நடத்துதல், புதிய மகளிர் தொழில்முனைவோரை அடையாளம் காணுதல், தேர்வு செய்தல் மற்றும் தொடக்கநிலை தொழில்முனைவுக்கான ஆதரவு (Incubation support) வழங்குதல்.

- **நிறுவன ஒத்துழைப்பு அமைப்புகள் (Institutional Partners):** TNSRLM, Startup TN, EDII–TN, Startup India, AIM/AIC, NITI Aayog, ஆதிதிராவிடர் நலத்துறை, iTNT Hub, TNSDC மற்றும் முறைப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்கள், பயிற்சி நிறுவனங்கள், அரசு/தனியார் கல்லூரிகளால் நிர்வகிக்கப்படும் தொடக்கநிலை தொழில்முனைவுக்கான ஆதரவு மையங்கள் (Incubation Centres), ஏஞ்சல் முதலீட்டாளர்கள், முதலீட்டு நிறுவனங்கள் (VCs), அதிக நிகர மதிப்புடைய தனிநபர்கள் (HNI), படைப்பாற்றல் நிறுவனங்கள் (Creative

Agencies) மற்றும் உணவு ஆய்வகங்கள் (Food Labs) ஆகியவற்றுடன் திட்டமிட்ட தொழில் முனைவுக்கான ஆதரவு கூட்டாண்மைகளை (Strategic Incubation Partnerships) ஏற்படுத்துதல்.

## 5.2. 2026–27 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் உத்திகள் மற்றும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள்

500 உயர்திறன் கொண்ட மகளிர் தலைமையிலான ஆரம்ப நிலை நிறுவனங்களை ஆதரவளித்து உயர்த்துதல் (Incubate), ரூ.30 கோடி மூலதன முதலீடு மற்றும் வணிகக் கடன் வசதிகளை ஏற்படுத்துதல், மேலும் ரூ.10 கோடி மதிப்பிலான B2B சந்தை இணைப்பு ஒப்பந்தங்களை உருவாக்குதல் ஆகியவை இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

2026–27 ஆம் ஆண்டில் TN–RISE பின்வரும் மூன்று முக்கிய முன்னுரிமைகளில் கவனம் செலுத்தும்:

1. உணவு பதப்படுத்துதல் மற்றும் ஊட்டச்சத்து, தனிநபர் பராமரிப்பு மற்றும் நல்வாழ்வு, கலை, கைவினை மற்றும் பாரம்பரியப் பொருட்கள், ஜவுளி மற்றும் ஆடைகள், அத்துடன் புத்தாக்கம் மற்றும் சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தும் நிறுவனங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, மேற்கு, தெற்கு மற்றும் கடலோரத் தமிழகம் முழுவதும் சிறப்பு மண்டல இன்குபேஷன் மையங்களை (incubation hubs) உருவாக்கி செயல்பாட்டிற்குக் கொண்டு வருதல் *[SDG 5.b, 8.2, 8.3]*

2. ஏற்றுமதிக்குத் தயாரான மகளிர் தொழில்முனைவோர் நிறுவனங்களுக்கு ஆதரவாக TN–RISE Acceleration Program–ஐ செயல்படுத்துதல். *(SDG இலக்குகள் 5.5, 5.a, 8.2, 8.3)*

3. ஆண்டுதோறும் மகளிர் தலைமையிலான தொழில் நிறுவனங்களுக்கான (Women Startup) முதலீட்டு முன்மொழிவு கூட்டத்தை (Pitch Summit) நடத்தி, சிறப்பாக செயல்படும் நிறுவனங்களுக்கு பங்கு முதலீடுகளை (Equity Investments) பெற்றுத் தருதல். *(SDG இலக்குகள் 5.a, 8.3, 8.10)*

## 5.3. திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள்

### 5.3.1. TN–RISE தொடக்கநிலை தொழில்முனைவுக்கான ஆதரவு (Incubation) மாதிரி

TN-RISE நான்கு நிலைகளைக் கொண்ட தொழில் இன்குபேஷன் செயல்முறையை செயல்படுத்துகிறது.

- நிலை 1: மாவட்ட தொழில்முனைவோர் கண்டறியும் முகாம்கள் மற்றும் தேர்வு செய்தல்.

  அனைத்து மாவட்டங்களிலும் தொழில் முனைவோர் கண்டறியும் முகாம்கள் நடத்தி, கிராமப்புற மற்றும் நகர்ப்புர மகளிர், குழு தொழில்முனைவோர் மற்றும் முறைசாரா தொழில்களை அடையாளம் காணுதல்.

- நிலை 2: தொழில்நுட்ப இன்குபேஷன், முன்மாதிரி உருவாக்கம் மற்றும் தயாரிப்பு தரநிலைப்படுத்தல்.

  தேர்வு செய்யப்பட்ட தொழில்களுக்கு தயாரிப்பு மறுவடிவமைப்பு, தொழில்துறை வடிவமைப்பு, முன்மாதிரி உருவாக்கம்,

FSSAI இணக்கம், ISO சான்றிதழ் மற்றும் தொகுப்பு (Packaging) மேம்பாடு போன்ற தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல்.

- நிலை 3: வழிகாட்டுதல், தொழில் தலைமைத்துவம் மற்றும் திறன் மேம்பாடு.

நிறுவன வழிகாட்டிகள், தொழில்துறை நிபுணர்கள், நிதி ஆலோசகர்கள் மற்றும் கல்வியாளர்களுடன் தொழில் முனைவோர்களை இணைத்து தனிப்பட்ட தொழில் வழிகாட்டுதலை வழங்குதல்.

- நிலை 4: முதலீட்டு விரைவாக்கம் மற்றும் இணை மானியங்கள்

பின்வரும் நிதி வாய்ப்புகளுக்கு அணுகலை ஏற்படுத்துதல்:

- *TANSEED Special Category Grants:* மகளிர் தலைமையிலான தொடக்கநிலை

(Startup) நிறுவனங்களுக்கு ரூ.15 இலட்சம் வரை.

- *TNRTP Matching Grants*: தொழில் விரிவாக்கத்திற்கான இணை நிதி உதவி.
- *CGTMSE Credit Guarantees:* வங்கிகள் மூலம் ரூ. 1 கோடி வரை பிணையில்லா தொழில் கடன் வசதி.

**5.3.2. தொழில்முனைவோர் மற்றும் நிறுவனங்களின் திறன் மேம்பாடு**

- பாலின மற்றும் கிராம–நகர இடைவெளியை குறைக்கும் நோக்கில், பல்வேறு குழுக்களில் உள்ள மகளிர் தொழில்முனைவோருக்கு தொடக்கநிலை தொழில்முனைவுக்கான ஆதரவு (Incubation Support), வழிகாட்டுதல் மற்றும் துறைசார் தொழில் மேம்பாட்டு ஆதரவை வழங்குதல்.

- 150 மகளிர் தலைமையிலான நிறுவனங்களை சட்டப்பூர்வ இணக்கம் மற்றும் நிதி வலிமை கொண்ட நிறுவனங்களாக மாற்றுவதற்கு ஆதரவு வழங்குதல்.
- தொழில் முறைப்படுத்தல், சட்ட இணக்கம், தயாரிப்பு மேம்பாடு, தொழில் திட்டம் (Business Plan), வர்த்தக பெயராக்கம் (Branding), பொதி அமைத்தல் (Packaging) மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற துறைகளில் தொழில்முனைவோருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கி அடித்தட்டு தொழில்முனைவோரை வலுப்படுத்துதல்.

## 5.4. 2026–27 ஆம் ஆண்டிற்கான முக்கிய இலக்குகள்

| தொடக்கநிலை தொழில்முனைவுக்கான ஆதரவு (Incubation) குறியீடு / இலக்கு | 2025–26 வரையிலான முன்னேற்றம் | 2026–27 முன்மொழியப்பட்ட இலக்கு |
|---|---|---|
| மாவட்ட தொழில் முனைவோர் கண்டறியும் முகாம் | 38 | 76 (ஒரு மாவட்டத்திற்கு 2 சுற்றுகள்) |
| தேர்வு செய்யப்பட்ட மற்றும் தொழில் முனைவோர் கண்டறியும் முகாமில் பங்கேற்ற தொழில்முனைவோர் | 800 | 6,000 |
| காப்பு மையத்திற்கான (Incubation) தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்கநிலை (Startup) நிறுவனங்கள் | 67 | 500 |
| திரட்டப்பட்ட முதலீட்டு மானியங்கள் (TANSEED/MGS) | – | ரூ.2.00 கோடி |
| வணிக வங்கிகள் மூலம் ஏற்படுத்தப்பட்ட கடன் வசதி | ரூ. 1.00 கோடி | ரூ. 28.00 கோடி |

# 6. தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY)

## 6.1. பின்னணி

தமிழ்நாட்டின் திறன் மேம்பாட்டு கட்டமைப்பானது, தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY), ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs) மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு முகாம்கள் ஆகியவற்றின் மூலம் கிராமப்புற இளைஞர்களை ஊதிய வேலைவாய்ப்பு, சுய வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் என பல்வேறு வாய்ப்புகளுக்காக தயார்படுத்துகிறது.

தமிழ்நாட்டின் மக்கள் தொகை வளத்தை திறம்பட பயன்படுத்தி, கிராமப்புற இளைஞர்களை வேலைவாய்ப்பின்மை மற்றும் பகுதி அளவிலான வேலைவாய்ப்பு நிலையிலிருந்து பெரும் தொழில்நிறுவனங்களில் முறையான வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW) மூலம் தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி

திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு இடையே 60:40 நிதிப் பங்களிப்பு அடிப்படையில் செயல்படுத்தப்படும் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு திட்டமாகும்.

தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம், ஏழை மற்றும் நலிவடைந்த குடும்பங்களைச் சேர்ந்த கிராமப்புற இளைஞர்களை மட்டுமே இலக்காகக் கொண்டுள்ளது:

- வயது தகுதி: 18 முதல் 35 வயதுக்குட்பட்ட கிராமப்புற இளைஞர்கள்.
- சிறப்பு பிரிவினருக்கான வயது தளர்வு: பெண்கள், பட்டியலினத்தவர் (SC), பழங்குடியினர் (ST), மாற்றுத்திறனாளிகள் (PwDs), திருநங்கைகள் மற்றும் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு அதிகபட்ச

வயது வரம்பு 45 ஆண்டுகள் வரை தளர்த்தப்பட்டுள்ளது.

- இலக்கு சார்ந்த பயனாளி தேர்வு: கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் பராமரிக்கப்படும் மக்கள் நிலை ஆய்வு தரவுத்தளத்தின் அடிப்படையில், சமூக வல்லுநர்கள் மூலம் தகுதியான கிராமப்புற இளைஞர்கள் கண்டறியப்பட்டு, கிராம அளவிலான மக்கள் திரட்டல் முகாம்கள் மூலம் உள்ளூர் சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் வாயிலாக பயிற்சிக்கான பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம், அங்கீகரிக்கப்பட்ட திட்ட செயலாக்க முகமைகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது:

- **திட்ட செயலாக்க முகமைகளுக்கான அங்கீகாரம்:** தொழில்நுட்பம் வாய்ந்த

முழுமையான தேர்வு முறை மூலம் மாநில திட்ட ஒப்புதல் குழு வாயிலாக அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள், நிறுவனங்களின் திறன் மேம்பாட்டு பிரிவுகள் மற்றும் சிறப்பு தனித்துவமிக்க தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

- **முழு மானியத்துடன் கூடிய தங்கும் வசதியுடன் பயிற்சி:** பயிற்சி பெறும் நபர்களுக்கு தங்குமிடம், உணவு, சீருடை, கற்றல் உபகரணங்கள் மற்றும் காப்பீட்டு வசதி உள்ளிட்டவை முழுவதும் கட்டணமின்றி தங்கும் வசதியுடன் பயிற்சி வழங்கப்படுகிறது.
- **தேசிய திறன் தகுதி கட்டமைப்பு (NSQF) தரநிலைக்கு ஏற்ப பாடத்திட்டம்:** அனைத்து பயிற்சி பாடத்திட்டங்களும் தேசிய திறன் தகுதி கட்டமைப்பு அடிப்படையில்

வடிவமைக்கப்பட்டு, தேசிய தொழில் கல்வி மற்றும் பயிற்சி குழுமம் (NCVET) வாயிலாக அங்கீகரிக்கப்பட்ட திறன் குழுமங்களை கொண்டு பயிற்சியாளர்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றனர்.

**6.2. 2026–27 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் உத்திகள் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள்**

2026–27 ஆம் ஆண்டில், தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் கீழ்க்கண்ட இரண்டு முக்கிய முன்னுரிமைகளில் கவனம் செலுத்தும்:

1. 56,200 கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு சந்தையின் தேவைக்கேற்ப திறன் பயிற்சி வழங்குதல். திறன் பயிற்சிகளில் பெண்களின் சேர்க்கை விகிதம் குறைந்தபட்சம் 65 சதவீத அளவை அடைய உறுதி செய்யப்படும். மேலும்,

தொழில்துறை 5.0 மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். *(SDG இலக்குகள்: 4.4, 4.5, 5.5 மற்றும் 8.6)*

2. அதிக வளர்ச்சி அடைந்த உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில், பயிற்சி சான்றிதழ் பெற்ற 40,000 இளைஞர்களுக்கு உத்தரவாத ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல். *(SDG இலக்குகள்: 8.3, 8.5 மற்றும் 8.6)*

## 6.3. திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள்

### 6.3.1. திறன் பயிற்சி

தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் இதுவரை 6,614 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் தகவல்

தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் (IT–ITES), சுகாதாரம், ஆடைத் தயாரிப்பு, மின்னணுவியல் உள்ளிட்ட முக்கிய துறைகள் இடம்பெறுகின்றன. **2026–27 ஆம் ஆண்டில் 19,200 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

### 6.3.2 பணி நியமனம் மற்றும் பணி நியமனத்திற்குப் பிந்தைய ஆதரவு

தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம், வேலைவாய்ப்பு செயல்திறனை கட்டாயமாக்குகிறது:

- கட்டாய 70 சதவீத வேலைவாய்ப்பு: திட்ட செயலாக்க முகமைகள், பயிற்சி முடித்த இளைஞர்களில் குறைந்தபட்சம் 70 சதவீத இளைஞர்களுக்கு மாநில அரசின் குறைந்தபட்ச ஊதியம் அல்லது அதற்கு மேற்பட்ட ஊதியத்துடன் கூடிய

முறையான வேலைவாய்ப்பை பெற்றுத்தர வேண்டும்.

- 12 மாதங்களுக்கு பணி தொடர்ச்சி கண்காணிப்பு: வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்களின் நிலை மாதந்தோறும் கண்காணிக்கப்பட்டு, பணியில் தொடர்வதை உறுதி செய்வதற்காக பணி நியமனத்திற்குப் பிந்தைய ஆதரவு தொகை மாதம் ரூ.1,270 வீதம் 6 மாதங்கள் வரை வழங்கப்படுகிறது.

**6.3.3 ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs)**

வங்கி தலைமையிலான உள்கட்டமைப்பின் மூலம் ஊரக சுய வேலைவாய்ப்பை மேம்படுத்தும் வகையில் செயல்படுகிறது. **2026-27 ஆம் ஆண்டில் ரூ.34 கோடி மதிப்பீட்டில் 37,000 நபர்களுக்கு**

**பயிற்சி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது**. இவ்வாண்டில் இதுவரை 6,623 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, 3,709 நபர்கள் வெற்றிகரமாக சுய வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

**6.3.4 வேலைவாய்ப்பு முகாம்கள்**

மாநிலம் முழுவதும் **நடைபெறவுள்ள** மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் இளைஞர்கள் திரட்டப்பட்டு, நேரடி வேலைவாய்ப்புகளுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. **2026-27 ஆம் ஆண்டில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் 100 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

## 6.4. 2026–27 ஆம் ஆண்டிற்கான முக்கிய இலக்குகள்

| குறியீடுகள் | 2025–26 முன்னேற்றம் | 2026–27 இலக்கு |
|---|---|---|
| திறன் பயிற்சி பெற்ற கிராமப்புற இளைஞர்கள் | 47,106 | 56,200 |
| பயிற்சியை வெற்றிகரமாக முடித்து சான்றிதழ் பெற்ற கிராமப்புற இளைஞர்கள் | 45,660 | 50,400 |
| மாத ஊதிய வேலைவாய்ப்பு / சுய வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்கள் (குறைந்தபட்சம் 70%) | 26,352 | 40,000 |
| பெண் பயிற்சியாளர்கள் சேர்க்கை விகிதம் | 55% | 60% |
| செயல்பாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட திட்டச் செயலாக்க முகமைகள் | 39 | 75 |
| பணி நியமனத்திற்குப் பின் பணி தொடர்ச்சி விகிதம் (6 மாதங்கள்) | 70% | 70% |

# 7. தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் (TNWeSafe)

## 7.1. பின்னணி

தமிழ்நாடு மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு (GDP) நேரடியாகப் பங்களிப்பதிலும், 2036–ஆம் ஆண்டிற்குள் 1.5 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலக்கை அடைவதை நோக்கி மாநிலத்தை முன்னெடுத்துச் செல்வதிலும், முறையான வேலைவாய்ப்பு மற்றும் உயர்தரப் பணிகளில் பெண்களின் பங்கேற்பு மிக முக்கியமானது. வளர்ந்து வரும் துறைகள் உள்ளிட்ட பண்ணை சாராத துறைகளில் பணிபுரியும் பெண்களின் பங்கேற்பை (FLFP) மேம்படுத்துவதற்காக, ஏப்ரல் 2024–இல் 'தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் ஒரு சங்கமாக நிறுவப்பட்டது

தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டமானது பெண்களை முறைசார்ந்த தொழில்களில் ஈடுபடச் செய்யவும், அவர்களின் பணியிட பாதுகாப்பினை

மேம்படுத்துவதற்க்கான திட்டமாகும். இத்திட்டமானது உலக வங்கியின் உதவியுடன் ஐந்து ஆண்டுகளுக்கு (2025–2030) 150 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ. 1,249 கோடி) கடனுதவியுடன் பெண்களின் வேலைவாய்ப்பு, பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு, கட்டமைக்கப்பட்ட நிலையான மற்றும் உள்ளார்ந்த பொருளாதார மேம்பாட்டினை அடையும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 7.2. திட்டம் – ஓர் பார்வை

தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டமானது 3 முக்கிய தூண்கள் மற்றும் 9 நிதி வழங்களுக்கான குறியீடுகள் வாயிலாக திட்ட நோக்கங்களை அடைவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 7.2.1. முக்கிய தூண்கள்

- பணிவழங்குதல் **(EMPLOY):** முன்னேறிவரும் துறைகளில் பெண்களுக்கான வேலைவாய்ப்பினை அதிகரித்தல் மற்றும் பண்ணை சாரா தொழில்களில் பெண்களின் பங்களிப்பினை மேம்படுத்துதல்.

- வசதிப்படுத்துதல் **(ENABLE)**: பெண்களின் வேலை வாய்ப்புகளை அதிகரிக்க உரிய வசதிகளை செய்து கொடுத்தல்

- வலுப்படுத்துதல் **(EMPOWER)**: பெண்களின் வேலைவாய்ப்பிற்கு உரிய வசதிகளை ஏற்படுத்தி, தொழில்நுட்ப பங்களிப்புகள் மற்றும் அமைப்பியல் ரீதியான கட்டமைப்புகள் ஆகியவற்றினை வலுப்படுத்துதல்.

### 7.2.2. 'நிதி வழங்களுக்கான குறியீடுகள்' ஓர் பார்வை 2025–2030:

இத்திட்டத்தின் செயல்பாடானது, கீழ்கண்ட 'நிதி வழங்களுக்கான குறியீடுகள்' (DLIs) அடிப்படையில் கண்காணிக்கப்படும். இவை உலக வங்கியிடமிருந்து, 2025–2030 வரை திட்ட நிதியை பெறுவதற்கான முக்கிய மைல்கற்களாகும்.

- **Womenomics** (DLI–1): பெண்களுக்கான தரமான வேலைவாய்ப்புத்திட்டம் (WQEP), குறைந்த பட்சம் 50% மாவட்டங்களுக்கு உருவாக்கப்பட்டு, அங்கீகரிக்கப்படும்.
- **திறன்சுடர்** (DLI–2): பெண் பயனாளிகளுக்கு திறன்மேம்பாட்டு பயிற்சி.
- **கலங்கரை** (DLI–3): பெண் பயனாளிகளுக்கு வருடாந்திர வேலைவாய்ப்பு உதவி.
- **தொழில்விதை** (DLI–4:) பண்ணை சாரா தொழில்களில் ஈடுபடும் பெண்

தொழில்முனைவோர் திட்டப் பயனாளிகளுக்கு கூடுதல் தொழில்முனைவு உதவிகள்.

- **தொழிலணங்கு** (DLI–5): பண்ணை சாரா தொழில்களில் ஈடுபட்டு வரும் பெண் தொழில்முனைவோருக்கு தொடக்க மையங்களை ஏற்படுத்துதல், பகிர்ந்த பணியிட வசதி, தொழில் வளர்ச்சியை விரைவுப்படுத்தும் சேவைகள் போன்றவற்றினை ஏற்படுத்துதல்.
- **அன்புக்குடில்** (DLI–6): குழந்தைகள் காப்பகம், பள்ளிக்குப் பிறகான காப்பக வசதி, குழு அமைப்பிலான முதியோர் பாதுகாப்பு நிலையங்கள், பாதுகாப்பான மற்றும் மேம்பட்ட வசதிகள் உடைய பெண்கள் தங்கும் விடுதி ஆகியவற்றினை ஏற்படுத்துதல்.

- **கதிரொளி** (DLI–7): நடைமுறை மாற்றங்களுக்குரிய விழிப்புணர்வு திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல்.
- **SHENERGY** (DLI–8): 60% மாவட்டங்களிலும் மாநில அளவிலும் அங்கீகரிக்கப்பட்ட பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துதல்.
- **மகளிர் தகவல் வங்கி** (DLI–9): பெண்கள் வேலைவாய்ப்பு தொடர்பாக பல்துறை தளம் ஒன்றினை உருவாக்கி மாநில அளவிலும் குறைந்தபட்சம் 50% மாவட்டங்களில் நிறுவுதல்.

இத்திட்டமானது மாநில அளவில், **மாநில திட்ட மேலாண்மை அலகு** மற்றும் மாவட்ட அளவில் **மாவட்ட திட்ட மேலாண்மை அலகுகள்** அமைத்து, சிறப்பான வகையில்

மாவட்டங்களுடன் இணைந்து பணியாற்றும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பெண்களை முறைசார்ந்த தொழில்களில் ஈடுபடச் செய்யவும், அவர்களின் பணியிட பாதுகாப்பினை மேம்படுத்துவதும், வலுப்படுத்துவதும் ஆகும்.

## 7.3. 2025–26 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயல்பாடுகள்

### 7.3.1. பெண்களுக்கான தரமான வேலைவாய்ப்புத் திட்டம் (WQEP)

மாநில மற்றும் மாவட்ட அளவில் 'பெண்களுக்கான தரமான வேலைவாய்ப்புத் திட்டத்தினை' (WQEP) தயாரிப்பதற்கு வழிகாட்டும் ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இக்கட்டமைப்பானது தடைகளை அடையாளம் காணுதல், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் கொள்கை ரீதியான நடவடிக்கைகள், பராமரிப்புச்

சேவைகள், தற்போதைய நிலை குறித்த பகுப்பாய்வு, இடைவெளிகளைக் கண்டறிதல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஆய்வின் அடிப்படையில் வடிவமைக்கப்படுகிறது.

### 7.3.2. பெண்களுக்கான திறன் பயிற்சி மற்றும் தொழில் ஆதரவு

பெண்களுக்கு, தொழிற்துறை அனுபவம் மற்றும் நடைமுறை அறிவுக்கு இடையிலான இடைவெளியைக் குறைக்கவும், பெண் பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத் திறன்களை மேம்படுத்தவும், அவர்களுக்குத் தொழில்சார் நடைமுறை அனுபவத்தை வழங்கும் வகையிலான வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

### 7.3.3. பெண் தொழில்முனைவோருக்கான தொழில்முனைவு ஆதரவு

- விரிவான தொழில்முனைவோர் கற்றல் வளங்கள் மற்றும் 'அனைவருக்குமான திறந்தநிலை இணையவழிப் பாடநெறி' (MOOC) ஆகியவை உருவாக்கப்பட்டு, 'தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவங்களுக்கான (MSME) வசதி மையம்' (FaMeTN)–இன் கற்றல் தொகுதி அமைப்பில் (LMS) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் உள்ள பெண் தொழில்முனைவோருக்கு முறையான தொழில்முனைவோர் கல்விக்கான தொடர்ச்சியான அணுகலை வழங்கும் ஒரு டிஜிட்டல் கற்றல் தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

- பெண் தொழில்முனைவோரை ஆதரிப்பதற்கான "தொழில் வளர் காப்பகங்கள்" தொழில் தொடக்க நிலை ஆதரவு சேவைகளை மதிப்பீடு செய்யவும், மேம்படுத்தவும் விரிவான மாநில அளவிலான திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

**7.3.4. பெண்களுக்கான பராமரிப்பு மற்றும் ஆதரவு சேவைகள் ஏற்படுத்துதல்**

- முறையான மற்றும் முறைசாரா துறைகளில் பணிபுரியும் தாய்மார்களின் குழந்தைப் பராமரிப்புத் தேவைகள், விருப்பங்கள், அணுகல்தன்மை, கட்டணம் செலுத்தும் திறன் மற்றும் பூர்த்தி செய்யப்படாத தேவைகள் ஆகியவற்றை மதிப்பிடுவதன் மூலம் குழந்தைப் பராமரிப்பு வசதிகளுக்கான கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதில்

**குழந்தைகள் காப்பகம்** (creche) மற்றும் பள்ளி நேரத்திற்குப் பிறகான குழந்தை பராமரிப்பு வசதிகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் கருத்துகள், அமைவிடம், பாதுகாப்பு, போக்குவரத்து, நேரம், வயது வரம்பு மற்றும் பராமரிப்பின் தரம் போன்ற அம்சங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு, பொருத்தமான குழந்தைப் பராமரிப்புக் கொள்கைகள் மற்றும் சேவைகளை உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பணிபுரியும் பெண்களின் பங்கேற்பை வலுப்படுத்தவும், வேலை நேரத்தில் மூத்த குடும்ப உறுப்பினர்களுக்கு அணுகக்கூடிய மற்றும் நம்பகமான பகல்நேர பராமரிப்பு சேவைகளை வழங்குவதன் மூலம் பணியைத் தொடர்வதை உறுதி செய்யவும்,

சமூகம் சார்ந்த முதியோர் பராமரிப்புக்கான கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

- வேலைவாய்ப்பு உள்ள பகுதிகளில் உள்ள புதிய மற்றும் ஏற்கனவே உள்ள விடுதி வசதிகளைப் நலிவடைந்த பெண்கள் அணுகுவதை அதிகரிக்கவும் கண்காணிக்கவும் ஒரு அமைப்பும் திட்டமும் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இளம் புலம்பெயர்ந்த மற்றும் நலிவடைந்த பெண்களுக்கு முன்னுரிமை அளித்து, வேலைவாய்ப்பு சார்ந்த இடங்களில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதி அமைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது. விடுதித் திட்டமிடலைத் தேவைகளின் அடிப்படையில் அமைத்தல், அணுகல்தன்மையை மேம்படுத்துதல், தங்குபவர்களுக்கான ஆதரவை

வலுப்படுத்துதல் மற்றும் அணுகல், பயன்பாடு, தரம் மற்றும் தங்குபவர்களின் வசதி ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணித்தல் ஆகியவை இதில் அடங்கும்.

### 7.3.5. பெண்களை வலுப்படுத்தும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள்

விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டும் வகையில் 'நடத்தை மாற்றத் தகவல் (Behavioural Change Communication) தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்புகளின் (modules) கருப்பொருள்களில் பணியிடப் பாதுகாப்பு, பொது இடங்கள், பெண்களின் சுகாதாரம், நிதிசார் அறிவு, வாழ்க்கைத்திறன்கள், டிஜிட்டல் அறிவு மற்றும் இணையப் பாதுகாப்பு ஆகியவை அடங்கும். இந்த முன்னெடுப்பு, பெண்கள் தங்கள் உரிமைகள், சேவைகள் மற்றும் ஆதரவு

அமைப்புகளை அணுகுவதற்கான அறிவையும், திறனையும் வலுப்படுத்த உதவும். இதன் மூலம் பெண்கள் சமூக மற்றும் பொருளாதார வாழ்வில் பாதுகாப்பான, விழிப்புணர்வுடன் கூடிய மற்றும் வலுவான பங்கேற்பிற்கு வழிவகை செய்யும்.

### 7.3.6. பெண்கள் பாதுகாப்பு

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திற்காக, இணையதளம் மற்றும் செயலி (mobile app) வாயிலாக இயங்கும் 'பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் தொல்லை' (POSH) தொடர்பான புகார்களைப் பதிவு செய்தல், தீர்வு காணுதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றுக்கான அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளம் பிப்ரவரி 2026 முதல் செயல்பாட்டில் உள்ளது.

### 7.3.7. பல்துறை சார்ந்த தளம்

பெண்களின் வேலைவாய்ப்பு தொடர்பான மாநில மற்றும் மாவட்ட அளவிலான பல்துறை சார்ந்த தளம், மாநில அளவிலும், ராணிப்பேட்டை, திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் தளம், முக்கிய அரசுத் துறைகள், தனியார் துறைப் பங்குதாரர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள், மற்றும் பிற பங்கேற்பாளர்களை ஒன்றிணைத்து, பெண்களின் வேலைவாய்ப்பு, தொழில்முனைவு, பராமரிப்புச் சேவைகள் மற்றும் பணியிடப் பாதுகாப்பு ஆகியன குறித்த ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகின்றன. மேலும், இவை தொடர்ச்சியான கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதோடு, மாவட்டத்திற்கேற்ற சவால்களைக் கண்டறிந்து, பெண்களின் பணித்திறன் பங்கேற்பை மேம்படுத்துவதற்கான உள்ளூர் சூழலுக்கு ஏற்ற

தீர்வுகளை உருவாக்கவும் செயல்படுத்தவும் ஆதரவளிக்கின்றன.

## 7.4. செயல்திட்டம் (2026–2027)

### 7.4.1. பெண்களுக்கான தரமான வேலைவாய்ப்புத் திட்டம் (WQEP)

பெண்களின் பணித்திறன் பங்கேற்பை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட கட்டமைப்பின் அடிப்படையில், நான்கு மாவட்டங்களுக்கு (சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர்) 'பெண்களுக்கான தரமான வேலைவாய்ப்புத் திட்டம்' (WQEP) உருவாக்கப்படும்.

### 7.4.2. பெண்களுக்கான திறன் பயிற்சி மற்றும் தொழில் ஆதரவு

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின், திறன் பயிற்சிப் பிரிவின் கீழ், மதிப்பீட்டுப் பணிகளுக்கென ஒரு பிரத்யேகப் பிரிவு

அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவை மேலும் வலுப்படுத்த, பாலின உணர்திறன் கொண்ட பாடத்திட்டங்கள் இதில் சேர்க்கப்படும். இதன் மூலம், திறன் பயிற்சிக்கான பாடத்திட்டங்கள் பாலினச் சமத்துவக் கண்ணோட்டத்துடன் வடிவமைக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

- பெண்கள் தங்கள் பணிவாழ்வு தொடர்பான சரியான முடிவுகளை எடுக்கவும், அதற்கான ஆதரவு சேவைகளைப் பெறவும் உதவும் வகையில் உளவியல் அளவீட்டுத் தேர்வு (Psychometric test) முறையை உருவாக்கிச் செயல்படுத்தப்படும்.

### 7.4.3. பெண் தொழில்முனைவோருக்கான தொழில்முனைவு ஆதரவு

- பண்ணை சாராத மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் நிலையான தொழில் வாய்ப்புகளை மேற்கொள்ள, ஏற்கனவே

தொழில்முனைவோராக இருப்பவர்கள், தொழில்முனைவோராக விரும்பும் பெண்கள் மற்றும் நலிவடைந்த பிரிவினைச் சேர்ந்த பெண்கள் போன்ற 6,000 பெண்களுக்கு ஆதரவு அளிக்கப்படும். தங்கள் தொழிலைத் தொடங்கவும், வலுப்படுத்தவும் மற்றும் விரிவுபடுத்தவும் தேவையான தொழில்நுட்ப நிபுணத்துவம், நிதிசார் வழிகாட்டுதல், வணிகத் திட்ட உருவாக்கம், சந்தை இணைப்புகள், திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் செயல்பாட்டு ஆதரவு ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட உதவிகள் வழங்கப்படும்.

- பெண்கள் தங்கள் தொழில்முனைவோர் பயணத்தின் அனைத்துக் கட்டங்களிலும் முழுமையான மற்றும் விரிவான ஆதரவைப்

பெறும் வகையில், சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் 'மகளிர் தொழில்முனைவோர் மையங்கள்' (Women Entrepreneurship Hubs) நிறுவப்படும். இம்மையங்கள், பெண்கள் தங்கள் தொழிலைத் தொடங்கவும், வலுப்படுத்தவும் மற்றும் விரிவுபடுத்தவும் உதவும் வகையில் சிறப்புப் பயிற்சிகள், கூட்டாகப் பணியாற்றுவதற்கான வசதிகள் (coworking facilities), நிதி மற்றும் டிஜிட்டல் அறிவுசார் திட்டங்கள், அத்துடன் பிரத்யேகமான அடையாளப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் சேவைகளை வழங்கும்.

- தமிழ்நாடு புத்தொழில் இயக்கம் (StartupTN) வழங்கும் மகளிர் தொழில் வளர் காப்பகங்கள் ஊக்கத் திட்டத்தில் புத்தொழில் நிறுவனங்களின் வணிக மேம்பாடு, சந்தை

அணுகல் மற்றும் வளர்ச்சியை வலுப்படுத்துவதற்காக, நிதி மற்றும் தொழில் வளர்ச்சிக்கான சூழல் அமைப்பு சார்ந்த ஆதரவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- தமிழ்நாடு புத்தொழில் இயக்கம் (StartupTN) வழங்கும், தமிழ்நாடு புத்தொழில் ஆதரவு நிதித்திட்டத்தில் (TANSEED), இந்த ஆண்டின், பயனாளிகளுக்கான ஒதுக்கீட்டில் 25 சதவீதம், பெண் தொழில்முனைவோருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

### 7.4.4. பெண்களுக்கான பராமரிப்பு மற்றும் ஆதரவு சேவைகள் ஏற்படுத்துதல்

செங்கல்பட்டு, திருவள்ளூர், கரூர், காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் முதியோர் பகல் நேரக் காப்பகங்கள் அமைக்கப்படும். மேலும், காஞ்சிபுரம்

மற்றும் திருப்பூர் போன்ற அதிக வேலைவாய்ப்புகளைக் கொண்ட மாவட்டங்களில் பணிபுரியும் பெண்களுக்கான தங்கும் விடுதிகள் புதுப்பிக்கப்படும். இச்சேவைகள், பெண்களுக்கு, பராமரிப்புப் பணிகளின் சுமையைக் குறைப்பதற்காகவும் மற்றும் பாதுகாப்பான தங்குமிட வசதி வழங்குவதற்காகவும் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம், பெண்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதிலும், அதில் பங்கேற்பதிலும் மற்றும் தொடர்ந்து பணியில் நீடிப்பதிலும் முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 7.4.5. பெண்கள் அதிகாரமளித்தலை வலுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள்

விழிப்புணர்வு நடவடிக்கைகளை வழிநடத்துவதற்கு பாடத்திட்டத் தொகுப்புகளை (modules) உருவாக்க வேண்டும். இத்தொகுப்புகள்

'வளர்ந்து வரும் துறைகளில் பெண்கள்', 'பெண் தொழில்முனைவு மற்றும் பொருளாதார வாய்ப்புகள்' மற்றும் 'பெண்களின் வேலைவாய்ப்பில் வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறை' ஆகிய தலைப்புகளை உள்ளடக்கி உருவாக்கப்படும்.

### 7.4.6. பல்துறை சார்ந்த தளம்

2025-2026 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட 'பல்துறை சார்ந்த தளத்தினை அடிப்படையாகக் கொண்டு, மேலும் 10 மாவட்டங்களுக்கு (கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, மதுரை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் காஞ்சிபுரம்) விரிவுபடுத்தப்படும். இதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் பெண்களின் பணித்திறன் பங்கேற்பை மேம்படுத்தும் வகையில் உள்ளூர் சூழலுக்கு ஏற்ற தீர்வுகள் வழங்கப்படுவதுடன், பெண்களுக்கான வேலைவாய்ப்பு,

தொழில்முனைவு, பராமரிப்புச் சேவைகள் மற்றும் பணியிடப் பாதுகாப்பு ஆகிய அம்சங்களில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதை இத்தளம் நோக்கமாக கொண்டு செயல்படும்.

# 8. தொலைநோக்கு நடவடிக்கைகள்

## 8.1. 2031 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த தொலைநோக்கு (Vision 2031) கட்டமைப்பு

இந்த கட்டமைப்பு, நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்கு (SDG) 1, 2 மற்றும் 5–ன் கீழ் முழுமையான வறுமையை ஒழித்தல், பாலின சமத்துவத்தை மேம்படுத்துதல், சுய உதவிக் குழு மகளிர் உரிமையாளர்களைக் கொண்ட நிறுவனங்களை தமிழ்நாடு அரசின் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை நோக்கிய முக்கிய இயக்க சக்திகளாக நிலைநிறுத்துதல் ஆகியவை '**சிங்கப்பெண்கள் மேம்பாட்டுத் திட்டம்**' என்ற ஒருங்கிணைந்த தொலைநோக்குப் பார்வையின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.

- **அளவுசார் பொருளாதாரம் (Economics of Scale):** 10,00,000 சுய உதவிக் குழு குடும்பங்களை முறைப்படுத்தப்பட்ட

(Formal) தொழில் நிறுவனங்களாக மாற்றுவதன் மூலம், ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்து, தமிழ்நாட்டின் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை அடைவதற்கு பங்களிப்பு செய்தல்.

- **வறுமை ஒழிப்பு**: இலக்கு அடிப்படையிலான மிகவும் வறுமையில் உள்ள குடும்பங்களுக்கான சிறப்பு முயற்சிகள் மூலம், அனைத்து கிராமப்புற குடியிருப்புகள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், வறுமையை முற்றிலுமாக ஒழித்தல்.

## 8.2. ஓராண்டு செயல் திட்டம் (2026–2027) : ஒருங்கிணைப்பு மற்றும் மின்னணு உட்கட்டமைப்பு

- **முழுமையான நிறுவன வளத் திட்டமிடல் அமைப்பு:** தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

நிறுவனம் மேற்கொள்ளும் அனைத்து செயல்பாடுகளையும் முழுமையாக மின்னணுமயமாக்கி, நிர்வாகத்தை வலுப்படுத்தவும், வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தவும், பொறுப்புடைமையை உறுதி செய்யவும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளின் துல்லியமான நிதிநிலையை அறியவும், நிதி முறையாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யவும், அவற்றிற்கு தொடர்ச்சியான வழிகாட்டுதலை வழங்கவும், முழுமையான நிறுவன வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning – ERP) அமைப்பு செயல்படுத்தப்படும்.

- மேலும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றுக்கிடையேயான நிதிப்

பரிவர்த்தனைகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்குள் நடைபெறும் உள்கடன் மற்றும் பிற நிதிப் பரிவர்த்தனைகள் அனைத்தும் வங்கி பதிவுகளுடன் தணிக்கை மற்றும் ஒத்திசைவு செய்யப்படும். இதன் மூலம் வெளிப்படையான, துல்லியமான மற்றும் விரைவான நிதிக் கண்காணிப்பு அமைப்பு ஏற்படுத்தப்படும்.

## 8.3. மூன்றாண்டு செயல் திட்டம் (2026–2029): தொழில்துறை விரிவாக்கம் மற்றும் மதிப்புக்கூட்டல்

- 1,000 உற்பத்தியாளர் குழுக்களை, தொழில்முறை மேலாண்மைக் குழுக்களுடன் செயல்படும் 30 சட்டப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட

உற்பத்தியாளர் நிறுவனங்களாக மேம்படுத்துதல்.

- முழுமையான மின்னணு நிதி சார் கல்வி அடைதல், ஒவ்வொரு சுய உதவிக் குழு உறுப்பினரும் வணிக பரிவர்த்தனைகளுக்கு ஒருங்கிணைந்த பணப் பரிவர்த்தனை இடைமுகம் (UPI) மற்றும் மின்னணு வங்கி தளங்களைப் பயன்படுத்துவதை உறுதி செய்தல்.
- வேளாண்மை மற்றும் வேளாண்மை சாரா தொழில் தொகுப்புகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு மதிப்புக்கூட்டுதல், பொதியிடுதல் மற்றும் ஏற்றுமதி சந்தைப்படுத்தலை ஊக்குவிக்கும் வகையில், 100 சிறப்பு ஊரக தொழில் செயலாக்க அலகுகளை அமைத்தல்.

## 8.4. ஐந்தாண்டு செயல் திட்டம் (2026–2031): முழுமையான வறுமை ஒழிப்பு மற்றும் தொழில் முனைவோர் நிறுவனம்

- தமிழ்நாட்டின் அனைத்து கிராமப்புற மற்றும் நகர்ப்புர பகுதிகளிலும் முழுமையான வறுமையை ஒழித்தல்.
- 10,00,000 சுய உதவிக் குழு குடும்பங்களை முறைப்படுத்தப்பட்ட தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களாக மாற்றி, ஒவ்வொரு நிறுவனமும் ஆண்டுக்கு ரூ.5 இலட்சத்திற்கும் அதிகமான சரிபார்க்கப்பட்ட ஆண்டு வருமானம் (Annual Turnover) ஈட்டுவதை உறுதி செய்து, ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்து, தமிழ்நாட்டின் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை அடைவதற்கு பங்களிப்பு செய்தல்.

- SDG 5 இலக்கை முழுமையாக அடைந்து பாலின சமத்துவம், சமூகப் பாதுகாப்பு மற்றும் மகளிர் தலைமையிலான பொருளாதார வளர்ச்சிக்கான உலகளாவிய முன்மாதிரியாக தமிழ்நாட்டை உருவாக்குதல்

## 8.5. விரிவான முதன்மை செயல்பாட்டு முடிவுகளுக்கான கண்காணிப்பு பலகை மற்றும் முக்கிய செயல்திறன் குறியீட்டு அட்டவணை

| கொள்கைத் தொலைநோக்கு அளவீடு | இலக்கு நிலை (2026–27) | நீண்டகால இலக்கு (பார்வை 2031) |
|---|---|---|
| வருடாந்திர சுய உதவிக் குழு கடன் திரட்டல் | ரூ.38,000 கோடி | ரூ.42,000 கோடி |
| உற்பத்தியாளர் நிறுவனங்கள் / உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் செயல்பாட்டில் | 400 | 1,500 |

| | | |
|---|---|---|
| தொழில் வளர்ச்சி விரைவாக்கத் திட்டத்தில் இணைக்கப்பட்டவை (TN–RISE) | 500 | 750 |
| வருடாந்திர பயிற்சி அளிக்கப்பட்டு, பணியமர்த்தப்படவுள்ள இளைஞர்கள் (DDU–GKY) | 19,200 | 25,000 |
| வருடாந்திர பயிற்சி அளிக்கப்பட்டு சுயவேலைவாய்ப்பு பெறவுள்ள இளைஞர்கள் (RSETI) | 37,000 | 50,000 |
| மதி பொருட்கள் சில்லறை விற்பனை | ரூ.1,000 கோடி | ரூ.1,500 கோடி |
| ஆண்டுக்கு ரூ.1 லட்சத்திற்கு மேல் வருமானம் ஈட்டும் சுய உதவிக் குழு குடும்பங்கள் | 35% | 75% |

# 9. நிதி ஒதுக்கீடு

### 9.1. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் 2026–27 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நிதித் திட்டம் (ரூபாய் இலட்சத்தில்)

| கூறு | அனுமதிக்கப்பட்ட வரவு செலவு திட்டம் | உறுதியளிக்கப்பட்ட நிதி விடுவிப்பு |
|---|---:|---:|
| TNSRLM | 1,56,908.86 | 1,04,605.92 |
| MKSP | 3,333.33 | 3,333.33 |
| SVEP | 6,666.67 | 6,666.67 |
| NRLM மொத்தம் | 1,66,908.86 | 1,14,605.92 |
| DDU–GKY (2025–28) | 50,302.00 | – |
| TNULM | 2,380.00 | 2,380.00 |

# 10. முடிவுரை

## 10. முடிவுரை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிரின், குறிப்பாக ஏழை, நலிவுற்ற மற்றும் விளிம்புநிலைப் பிரிவுகளைச் சார்ந்தவர்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்வதில் தொடர்ந்து முன்னிலை வகிக்கும். வாழ்வாதார மேம்பாடு, திறன் வளர்த்தல், திறன் மேம்பாடு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் வாயிலாக பெண்களின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் தன்னம்பிக்கை மேலும் வலுப்படுத்தப்படும்.

ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளில் சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்தும் வகையில், விடுபட்டுள்ள பெண்களை சுய உதவிக் குழுக்களில் இணைத்தல், சுய உதவிக் குழுக்கள் மற்றும் அவற்றின் சமுதாயம் சார்ந்த அமைப்புகளை ஒருங்கிணைத்து, அரசின் நலத்திட்டப் பயன்களைப் பெறுதல் மற்றும் அரசு

திட்டங்கள் மற்றும் சேவைகளை மக்களிடம் கொண்டு சேர்த்தல் ஆகியவற்றிற்கான வலுவான நிறுவனங்களாக மேம்படுத்துதல் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM), தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM) மற்றும் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலம், தொழில் நிறுவன மேம்பாடு, தொகுப்புத் தொழில் வளர்ச்சி, மதிப்புக்கூட்டல், வணிகச் சின்ன மேம்பாடு மற்றும் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் ஆகியவற்றால் வேளாண்மை மற்றும் வேளாண்மை சாராத துறைகளில் நிலையான வாழ்வாதார வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வலுப்படுத்தப்படும். வளங்களைத் திறம்படப் பயன்படுத்தி சிறந்த விளைவுகளை ஏற்படுத்தும் வகையில், வாழ்வாதார இயக்கங்களுக்கிடையேயும் பிற அரசு

துறைகளுடனும் ஒருங்கிணைப்பு ஊக்குவிக்கப்படும்.

சுய உதவிக் குழுக்களின் அமைப்பை, அரசின் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களின் பயன்களை கடைக்கோடி மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கான திறன்மிக்க தளமாகப் பயன்படுத்தப்படும். இதன் மூலம், மிகவும் ஏழ்மை நிலையிலும் பின்தங்கிய நிலையிலும் உள்ள குடும்பங்களுக்கும் அரசின் திட்டப் பயன்கள் உரிய காலத்தில் வெளிப்படைத்தன்மையுடன் சென்றடைவது உறுதி செய்யப்படும். சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் வருமானத்தை உயர்த்துதல், தொழில் முனைவோரை ஊக்குவித்தல், வாழ்வாதாரப் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்

ஆகியவற்றிற்கு தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்படும்.

மகளிரின் முழுமையான மேம்பாடு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்வதில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து உறுதியுடன் செயல்படும். நிலையான வாழ்வாதார வாய்ப்புகள், வலுவான நிறுவன அமைப்புகள் மற்றும் பயனுள்ள ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் மூலம், பெண்களுக்கு சம வாய்ப்புகள், மேம்பட்ட பொருளாதாரப் பாதுகாப்பு மற்றும் சிறந்த வாழ்க்கைத் தரம் கிடைப்பதை உறுதி செய்வதற்கான முயற்சிகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். இதன்மூலம் வறுமையற்ற தமிழ்நாடு என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்க அரசு பங்காற்றும்.

**ச. ஜோசப் விஜய்**
**முதலமைச்சர்**
**தமிழ்நாடு அரசு**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச.ஜோசப் விஜய் அவர்கள் தலைமையில் 03.07.2026 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

# சுய உதவிக் குழுக் கூட்டம் மற்றும் பயிற்சி





# திறன் வளர்ப்பு – சுய உதவிக் குழு உறுப்பினர் பயிற்சி



# பண்ணைசார் வாழ்வாதார நடவடிக்கைகள்



சிறுதானியங்கள் விதை உற்பத்தி



தேயிலை சாகுபடி

# பண்ணைசாரா வாழ்வாதார நடவடிக்கைகள்










# பண்ணைசாரா வாழ்வாதார நடவடிக்கைகள்



பாரம்பரிய கைவினைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தோடா
பழங்குடியினரின் சுய உதவிக் குழு மகளிர்



சுகாதார நாப்கின்களைத் தயாரிக்கும்
சுய உதவிக் குழு



வாழைநார் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள
சுய உதவிக் குழு மகளிர்



பின்னல் ஆடைத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள
சுய உதவிக் குழு மகளிர்

# சந்தைப்படுத்துதல் நடவடிக்கைகள் – இயற்கை சந்தை











# தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம்



இளநிலை மென்பொருள் உருவாக்குநருக்கான பயிற்சி



பல்வகை சமையல் வல்லுனர்களுக்கான பயிற்சி

# தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்க மையம்



நிறுவனப் பயிற்சி




கண்காட்சி அரங்குகள்